REGD 4642

திராவிடநாடு

இலங்கை 15 சதம்] விலை அணா இரண்டு [மலாய்நாடு 12 காசு

மலர் 9	2–7–50	இதழ் 1

நாமும் நண்பர்களும்!

முதல்வரிசை:-- சுந்தா, வடிவேல், பரிமளம், சுந்தரேசன், சம்பந்தன்.

நடுவரிசை:- புட்டாசாமி. ஈழத்தடிகள், அரங்கண்ணல், சி. என். ஏ; வில்லாளன், இராசகோபால்.

மேல்வரிசை:- துரைசாமி, குப்புசாமி, இராசாபாதர், பஞ்சாட்சரம், கண்ணன், கே. ஆர். இராமசாமி, நரசிம்மன், கிருஷ்ணமூர்த்தி.

★ வேதனை கீதம் ★

[அரங்கண்ணல்]

திண்டாடுகின்றனர் — திகைப்புடன் ‘எங்கு தேடுவோம்?’ என்று எண்ணிய வண்ணமாய் ஏங்கிக் கொண்டிருக்கின்றனர்.

அவசரமாகத் திட்டங்கள் தீட்டி அனைத்தையும் நிறைவேற்றவேண்டும் என்ற ஆசையால் துவக்கப்பட்ட துங்கபத்திரை, கீழ்பவானி, மோயர், மக்குந்த் முதலான அணைக் கட்டுகளைக்கட்டிமுடிக்கவேண்டுமே, முதலில்லையே என்று முகாரி பாடுகின்றனர்! பைகாரா, பாபநாசம், சென்னை முதலிய மின்சார அபிவிருத்தித் திட்டங்கள் அரை குறையாகி விடுமோ, ஐயகோ! என் செய்வது என்று அங்கலாய்க்கின்றனர்.

கல்லும் உருகும் அவர்கள் படும் வேதனையைக் கண்டால்! நீர்ப்பாசனம் பெருகவும், மின்சார வசதி அதிகரிக்கவுமான திட்டங்களைத் தீட்டி அவைகளை நிறைவேற்ற 65 கோடி ரூபாய் செலவிடுவதென முடிவு செய்தனர் — முன்பு. நாட்டுக்கு நன்மையும், நல்லதும் பயக்கும் நற்காரியங்கள் தான் இவை.

ஆனால் நற்காரியங்கள் நட்டாற்றில் விடப்பட்டனவாகி விடுமோ என்று வெம்புகின்றனர்—கையிலோ நிதியில்லை, கேட்கவோ நாதியில்லை, வேறு எமக்கெதுவும் கதியில்லை என்று கதறுகின்றனர்!

1946—48ம் ஆண்டில் இத்திட்டங்களைத் தீட்டியபோது இவைகளை முடிப்பது பெரிதல்ல — இவ்வளவு பணமும் கிடைத்துவிடும் என்ற எண்ணத்துடன் தான் துவக்கினர் துவக்குமாறு இந்திய அரசாங்கமும் மாகாண சர்க்கார்களைத் தூண்டி, தேசிய நிர்மாணத் திட்டங்களைத் தீட்டி, தேசோத்தாரண வேலைகளில் ஈடுபடுங்கள் என்று மத்திய சர்க்கார், எச்சரித்தது—நல்லது சொல்கிறோம் அதன்படி நடவுங்கள் என்று உத்தரவிட்டது, உரத்த குரலில்!

இரண்டு ஆண்டுகளாகிவிட்டன இத்திட்டங்கள் துவக்கப்பட்டு. இதுவரை 25 கோடி ரூபாய்கள் செலவாகியிருக்கின்றன.

இவை முற்றுப்பெற இன்னும் இரு ஆண்டுகளாகலாம்—1952-ல் இந்த நீர்ப்பாசன அணைக்கட்டுகள் முற்றுப் பெற்றுவிட்டால் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் ஏக்கர் தரிசு நிலம் தளிர் நிலமாகலாமாம்! இப்போதுள்ளதைவிட இன்னொரு மடங்கு அதிகமான மின்சார சக்தியைப் பெறலாமாம்!

இத்தகைய நல்ல ஒரு திட்டத்தை நடத்திச் செல்ல ‘பண வசதியில்லை’ என்பதுதான் மாகாண சர்க்காரின் மனவேதனைக்குக் காரணம்.

நாட்டுக்கு நன்மை பயப்பதும் மக்களுக்கு மகத்தான பலனைத் தருவதுமான இத்திட்டங்களுக்கென இந்த ஆண்டு 15½ கோடி ரூபாய் தேவைப்படுகிறது.

இதுபோன்ற திட்டங்கள் துவக்கப்பட்டபோது தங்களாலான உதவியைச் செய்வதாக மத்திய அரசாங்கம் கூறியிருந்தது—மாகாண சர்க்காரும் “பெரிய தலைவர்களே கூறுகின்றனர்!” என்ற எண்ணத்தாலும், உதவாமலா போய்விடும் மத்திய சர்க்கார் என்ற நம்பிக்கையாலும் இவைகளை மேற்கொண்டனர்.

ஆனால், ஆசை காட்டி மோசம் செய்யும் ‘நிகழ்ச்சி’ கடந்த ஆண்டு நிகழ்ந்தது. வரவை விடச் செலவு அதிகமாவதாகக் கூறி, தான் வாக்களித்தபடி 6 கோடி ரூபாயைத் தருவதற்கில்லையென்று கை விரித்து விட்டது—மத்திய சர்க்கார்!

மாகாண சர்க்கார் மருண்டனர், கோபாலர் குதித்தார் — கோபத்தோடு பேசினார், ‘நம்பிக்கை தந்து பின்னர் எங்களை நட்டாற்றில் தள்ளுகிறது — பணமில்லையென்று கூறுகிறது. என் செய்வோம்?’ என்று அலறினர்—பின் அடங்கிவிட்டார்!!

விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கடன் வசூலிக்கப் போவதாகக் கர்ஜித்தார் — ஆனால் அவரது கூற்றை நம் போன்றோரும் மக்களும் எதிர்த்தோம்—‘வேதனை புரிப் பயணம்’ நடத்த எண்ணாதீர் என்று எச்சரித்தோம்!

நாட்டின் எதிர்ப்பைக் கண்டதும் அந்த எண்ணத்தை கைவிட்டனர்—மாகாண சர்க்கார்.

பாதுகாப்புப் பத்திரங்களை விற்றும், இன்ன பிற ஏற்பாடுகளைச் செய்தும் எப்படியோ சரிக்கட்டினர்.

இப்போது மீண்டும் சங்கடம்—உதயமாகியிருக்கிறது. இந்த ஆண்டுக்கான செலவுக்குப் பணவேட்டையாட வேண்டிய பரிதாப நிலையேற்பட்டிருக்கிறது.

X X X

“போன வருடமேதான் நம்மைப் போக்கிடமற்றவர்களாக்கினர்! பணம் தருவதாகச் சொல்லி, கடைசிநேரத்தில் காலை வாரிவிட்டனர்! ஆகவே இந்த ஆண்டாவது ஏதாவது உதவி கிடைக்கும், மத்திய சர்க்காரிலிருந்து என்றுதான் எதிர்பார்த்தோம்—நாங்கள் நம்பியது போலவே மத்திய சர்க்காரின் போக்கும் இருந்தது. எப்போதும் நம்மை இந்திய சர்க்கார் ஏமாற்றிக்கொண்டா இருக்கும்? இந்த ஆண்டு நம்மைக் கைவிட்டுவிட மாட்டார்கள்—நியாயம் அவர்களுக்குத் தெரியாததா? வேதனையைப் போக்காமல் வெறுமனேயிருந்தா விடுவார்கள்—என நேற்று நம்பினோம். ஆனால் நம்பிக்கை நாசமாயிற்று! இப்போதும் நம்மை ஏமாற்றிவிட்டனர்! என்ற கருத்துகளுடன் கடந்த 7-ந் தேதியன்று சென்னை சர்க்கார் அறிக்கையொன்று வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு தருவதாகச் சொல்லி ஏமாற்றியது மட்டுமல்ல இந்த ஆண்டும் ‘இல்லை யெதுவும்— இங்கே வராதே’ என்று வாயிலை

டியிருக்கிறது, இந்திய அரசாங் ம்.

மாகாணங்களுக்குக் கடன்கொடுப் தற்கென இந்த ஆண்டு வரவு சலவுத் திட்டத்தில் 35 கோடி பாய் ஒதுக்கியிருக்கிறது, மத்திய ரசாங்கம்! ஆனால் நமது மாகாணத் க்கென 'ஒரு பைசா' கூடக் கிடை ாது!!

வேதனைப்படும் சென்னை மாநிலத் க்கு எந்தவித கடனுதவியும் கிடை ாது. செல்வமும் வசதியும் காழிக்கும் பிற மாகாணங்களுக்கு டனுதவி உண்டு — ஆனால் இந்த ாகாணத்துக்கு இல்லை!!

X X X

இந்த வேதனை நிலையை விளக்கிய சர்க்காரின் அறிக்கை 'என் செய்வோம்?' என்று கேள்விக் குறியைப் போட்டுவிட்டு, மக்களிடமிருந்து பணத்தைக் கடனாகக் கோரத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறது. வசதி படைத்தோரிடமிருந்து வட்டிக்குப் பணம் வாங்கலாமா என்று யோசிக்கிறதாம் அரசாங்கம். ஆமாம், அரசாங்கம்தான்!!

தேசப் புனருத்தாரணத் திட்டங்கள் தேவையென்று தூண்டியதும் மத்திய சர்க்கார்—பணம் உதவுவோம் என்று நம்பிக்கை யூட்டியதும் மத்திய சர்க்கார்! ஆனால் திட்டங்களைப் போட்டு நிறைவேற்றிக் கொண்டிருக்கும்போது 'பணமில்லை' என்று பஞ்சகாதம் பாடுகிறது! அதுவும் பிற மாகணங்களுக்கு 30 கோடி தருவதற்கு ஒதுக்கி வைத்துக் கொண்டு, 'இல்லை! இல்லை!!' என்று முகத்திலடிக்கிறது.

தாமோதர் நதிப் பள்ளத்தாக்குப் போன்ற பெரிய பெரிய அணைக் கட்டுகளைக் கட்டப்போவதாகக் கூறி மத்திய அரசாங்கம் சர்வதேச பாங்கிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் பணத்தைக் கடனாகப் பெற்று வருகிறது. தாமோதர் நதிப் பள்ளத் தாக்கில் அணைக்கட்டு கட்டுவது—மத்திய சர்க்காராகும். அதற்கு மட்டும், எப்படியாவது பணத்தைக் கொண்டுவரவேண்டும் என்ற ஆர்வமிருக்கிறது—ஆனால் இங்குள்ள அணைக்கட்டுகள் பற்றியோ அக்கரை காட்டப்படவில்லை!

அதுமட்டும் தேசப் புனருத்தாரணத் திருப்பணி-இவையில்லையென்று அர்த்தமா? அல்லது தாமோதர் நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் வங்கத்தையும் பீகாரையும் வளமாக்குவது—இவை தென்னாட்டைச் சேர்ந்தவைதானே என்ற அலட்சியமா?

அறிவுள்ள எவருக்கும் கேட்கத் தான் தோன்றும். பிரிவினை பெற்றால் தான், தென்னாடு சோரம் போகாது வாழ முடியும் என்று கூறும் நாம் மட்டுமல்ல, "இந்து" இதழே தலையங்கம் தீட்டிக் கேட்கிறது, "தாமோதர்நதிப் பள்ளத்தாக்குப் போன்ற அணைக் கட்டுகளுக்கு மட்டும்பொருளாதார நெருக்கடியான நேரத்தில் தேவையானதொகைகளைக் காணும் மத்திய அரசாங்கம் சென்னை மாகாணத் திட்டங்களை ஏன் புறக்கணிக்கிறது?" என்று பொருள்படும் படியாக!

"மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் என் சென்னையை நடத்த

வருமானம்



வேண்டும் — முக்கிய திட்டங்களை நிறைவேற்ற என் பணம் உதவக் கூடாது?" என்றும் "இந்து" கேட்டிருக்கிறது, இன்னொரு பெரிய ஆங்கிலத் தினசரியான 'மெயில்' பத்திரிகையும் இதே கேள்வியைக் கேட்டிருக்கிறது — கொஞ்சம் காரத்துடன்!

வடநாடு—தென்னாட்டைப் புறக்கணிக்கவே செய்யும்! டெல்லிக்கும்—சென்னைக்குமுள்ள தூரம் அதிகம்! நமது குறைகளைத் தீர்க்க என்றும் இந்திய சர்க்கார் முயலாது என்றால், இங்குள்ளோர் நம்மீது சினம் கொள்கின்றனர்.

அவர்கள் சிந்தனைக்காக, இரு விளக்கப்படங்கள் தரப்பட்டிருக்கின்றன! வருமானம் மாகாணங்களிலிருந்து அப்படியே கொண்டு செல்லும் வருமான வரி, சுங்கவரியால் தான் அதிகம் கிடைக்கிறது!

செலவு—அபரிமிதமாக, பாதுகாப்புக்குத்தான் செலவாகிறது! பாதுகாபபு,வீண்பெருமை ஆகியவைகளுக்கென நாம்கொட்டித் தரும் பணம் கரியாகிறது! எனினும் நமதுவாழ்க்கையைமலர்விக்கும் நற்செயல்களுக்கு உதவுவதென்றாலோ முகத்திலறைகிறது, வடநாட்டவர் அமர்ந்திருக்கும் மத்திய அரசாங்கம்!

முகத்திலறைவது முதல் முறையல்ல-இரகசியமாகவும் கூட அல்ல!

பலமுறைகள் பகிரங்கமாக—அதுவும் ஓரவஞ்சனையோடு, மாற்றாந் தாய் மனப்பான்மையோடு!

ஏன் இது?—ஏற்படலாமா 'இந்தியா ஓரே நாடு' என்று கூறுவோரிடையில்!

இது முதல் முறையுமல்லவே! தொடர்கதைதானே இது? இருந்தும், இவர்கள் ஏன் வேதனை கீதம் எழுப்புவதோடு நின்று விடுகிறார்கள்! பாசமா அல்லது பயமா?—இரண்டுந்தான் என்றால், இவர்களின் பயபாசத்துக்காக நாடும் நாமும் நலிந்துதான் ஆகவேண்டுமா?

பதில் தரமாட்டார்கள் 'பணம் எங்கே தேடலாம்' என்று பார்த்துக் கிடக்கும் தேசியத் திருவாளர்கள், நாமும், பதிலை விரும்பவில்லை—நாட்டு மக்களைக் கேட்கிறோம், நல்லதா? இப்படி, 'இந்தியா ஒரே நாடு' என்று கூறிக்கொள்வதற்காக ஏமாந்து, இழிந்தவர்களாக என்றுமே நாம் வாழ்வது?

செலவு



நாம் இத்தகைய மூக்கறு படலங்கள்—முகத்திலே கரி பூசும் காண்டங்கள்—பலப்பல—சந்தர்ப்பங்கள் நேருகிற பொழுதெல்லாம் காட்டி வந்திருக்கிறோம்! நாம் பிரிவினை மனப்பான்மையால் இப்படி 'இட்டுக்

(14-ம் பக்கம் பார்க்க)

ஆரணி—ஒரு போரணி!

"வருக, வருக" என வரவேற்றார், வடார்க்காடு மாவட்ட தி. மு. கழக முதல் மாநாட்டின் வரவேற்புக் குழுவின் தலைவர் 'சுந்தரம்', கூடியிருந்த ஆயிரக்கணக்கான 'முற்று மீசையினரை,' முன்னேற்றப் பாதையில் நடந்துவரும் நரைமிகுந்து, உடல் திரங்கி, பற்கழன்றும், தம் ஆர்வம் குறையாத, ஆற்றல் தேயாத, 'பகுத்தறிவு பாட்டன்மாரை,' காண்டியையும், ஏணையையுமே பிடித்திடும் கரங்கள் என்று பேசிடும் பேச்சுக்கு மறுப்பு வழங்கவேண்டுமென்றே கூடியிருந்த தாய்மார்களை, தளிரும், துளிரும், பச்சிலையும், பழுப்பு இலையும் சுற்றிலும் சூழ்ந்திருக்க!—வந்திருந்த அன்னையர் குலத்தை!

புறக்கணிக்கப் பட்டோம், புறமுதுகிடச் செய்யப்பட்டோம், புலவர்களின் சூதுரையால், புரட்டர்களின் தந்திர ஏடுகளிலே வளர்ந்து கொழியும் புளுகுகளால் என்று திராவிட இனத்தின் தூங்கும் நிலையொழிக்க 'திறவுங்கள், விழிகளை' என்று முழக்கி, மாநாட்டைத் திறந்துவைத்தார், அருப்புக்கோட்டை அன்பர், இயக்க ஆர்வம் மிக்க எம். எஸ். இராமசாமி.

ஆரணிக் கோட்டை மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த அகண்டு விரிந்து, அழகு உமிழ்ந்து, அலங்காரம் கமழ்ந்து, பார்ப்பவர் இதயங்களில் திகைப்பைத் தடவி, ஆச்சரியத்தைப் பூசி மகிழ்விக்கும் பெரும் பந்தல் பிதுங்கி வழியக்கூடியிருந்த வீரர் அணிவகுப்பு, திரண்டு எழுந்து, தீயர்களைத் தீய்த்துப் பொசுக்குவோம், திருடர்களைப் பிடித்து நசுக்குவோம், தகிடுதத்தக்காரர்களைத் தவிடுபொடியாக்குவோம், தந்திரத்தால், சாகசத்தால் தங்கள் தொந்தி பெருத்திடச் செய்யலாம் என்று எண்ணிக் கிடக்கிறவர்களை இடித்து நொருக்குவோம் என்று ஆவேசங்கொண்டெழும்படி, தனது அழகு மொழியால், வேகநடையால், எதிரிகள் கண்டு திகைக்கும் எண்ண விளக்கங்களால், அன்பழகன் தலைமையுரையை, பரணிபாடித் தரணியாண்ட திராவிட வீரர்களின் போரணிக்குரிய போர்க்களப் பேச்சோ எனும்படி, வீரங்கொழிக்க விவேகம் மிதந்துவழிய, எக்கருத்து கொண்டாரும் அள்ளிப் பருகும் கருத்தாருணியாக இருக்கிறதே என்று கேட்டவர் வியந்துப் பாராட்டுரை வழங்க—நிகழ்த்தினார்!

திருவண்ணாமலை சண்முகம், நடிக நண்பர் நாராயணசாமி. திராவிடப்பாட்டி, இராமாமிர்தம் அம்மையார், பிரசாரப் படையின் செயல்வீரர் நெடுஞ்செழியன் அப்படைக்குரிய பெயரை நிலைநாட்டும் சிற்றரசு அமைப்புக் குழுவின் செயலாளர் நடராசன், இன்னும் பலர்—இப்படி இரண்டு நாள்கள் அறிவு மழை பொழிந்தபடியே இருந்திடக் கண்ட ஆரணியே பூரித்து உள்ளம் வீங்கிக் கிடந்தது — உணர்ச்சி தேங்கிக் கிடந்தது!

இயக்க எண்ணங்களைப் படம் பிடிக்கும் தீர்மானங்கள் நிறைவேறின, இரண்டாம் நாள், மாலையில், கட்சிவளர்ச்சிக்கெனத் 'தங்களையே' தந்துள்ள பல வீரர்கள் முன்மொழியவும் வழி மொழியவும், கூடியிருந்தோர் அலையோசையென கையொலி எழுப்பவுமாக!

முதல் நாள் 'வழக்கு வாபஸ்' 'கல்சுமந்த கசடர்கள்' என்ற ஓரங்க நாடகங்கள், இரண்டாம் நாள் சந்திரமோகன் நாடகம் நடந்தன.

மாநாடு, ஒரு இயக்கத்தின், ஒலிபெருக்கி — ஊராளும் 'பெரியவர்களுக்கும்', நாட்டவருக்கும், அதன் திட்டங்களை எடுத்துரைக்கும் ஒரு பேரவை — அது காலக் கண்ணாடி-காலம் புரளுவது போலக் கட்சியின் நடவடிக்கைகளிலே மாற்றங்கள், புதுமுறைகள் கையாளப்படலாம். அவைகளை எடுத்துக்காட்டும்! அது ஒரு 'தர்மா மீடர்'—ஊராருக்கும், ஊராளும் உரிமையைத் தட்டிப் பறித்துக்கொண்டு தாறுமாறாக நடக்கும் சர்க்காருக்கும் எடுத்துச் சொல்வதும், விளக்குவது மட்டுமல்ல, இயக்கத்திலே உள்ள உணர்ச்சியை, ஆர்வத்தை, கொள்கை வேகத்தை, கோட்பாட்டுத் தாகத்தை, இலட்சிய வளர்ச்சியை, எழுச்சியை, எண்ணத் தெளிவை அளந்திடவும் உதவும்! வெப்பத்தை அளப்பதைப் போல, காற்றின் அமுக்கத்தை அளப்பதைப் போல, மழையின் அளவை எடுத்துப் பார்ப்பதைப் போல — உணர்ச்சியை அளக்கும் ஒரு அளவு கருவி!

ஆம், திருச்சியிலே கண்டோம், திராவிடத் தீரரின் தெளிவான சிந்தனையில் மறைந்திருந்த நேர்மையின் வலிமையை! சென்னையிலே பார்த்தோம், கழகத்திற்காக, ஈட்டுண்ட சிங்கமாக காரியமாற்ற முடியும் என்ற கட்டு பாட்டுணர்ச்சியை. நடவடிக்கைகளிலே நாளும் காட்ட வேண்டிய நற்பண்பின் அழுக்கமான தழுவலை! கணியூர் கணித்துக் காட்டிற்று, காடுமேடுகளில் கூடினும், காட்டு வெள்ளம்போல் மக்களை இழுக்கும் இனிக்கும் கருத்துகள், இழிவுப் பள்ளத்தில் கிடக்கும் 'வாழ்ந்து கெட்ட' சமுதாயத்தின் புதுவாழ்விற்கு வழி காட்டும் தெளிவான திட்டங்கள் நம்மிடம் உண்டு, ஏராளமாக என்று புள்ளிக் கணக்கோடு! குறிஞ்சிப்பாடி கூறிற்று, நம் கண்ணியப் போக்குக்கு என்றும் வெற்றியுண்டு, எங்கு கூடினும், எத்தனை சங்கடங்கள் வந்து கொத்திக் கொத்திப் பிடுங்கினும் — என்று! சோழனின் சொந்தக்காரர்கள்— சோர்வைத் தழுவாத மழவர்கள்— முழவுத் தோளர்கள் — முன்னேற்றப் பாதையிலே, வீரமுழக்கத்தோடு விரைந்தோடும் வெற்றித் தாளர்கள்—எழுச்சி பெற்று விட்

(14-ம் பக்கம் பார்க்க)

பத்திரிகையாளரே! ★ ★ பத்திரிகையாளரே!!

நம் சோதிடர் பேசுகிறார்!
சோதிடப் பலன்
கோசாரப் பலன்
நாளை நடப்பது என்ன?
நமது சோதிடர்
இந்த வாரம்
இன்று நாள் எப்படி?
வருங்காலம்
சோதிடக் குறிப்பு

இப்படி ஆயிரம் தலைப்புகள்—அடுக்கடுக்காக! நாட்டின் நரம்புகள் போன்ற ஏடுகளில் — மக்களின் மனதை உழுது பயிரிடும் பேனாக் கலைஞர்களின் விளையாட்டு பூமியான மடல்களில் இருள் மதியை விரட்டி, பகுத்தறிவொளியைப் பரவச் செய்யும் — செய்ய வேண்டிய தின, வார, திங்கள் மலர்களில—இந்தக் கோரக்கூத்து! தேனில் கசப்பு, மனதைக் கவரும் மணத்தை வீசும் மலரில் மலத்தின் வாடை, பருகும் பொழுதே பரவசந்தரும் பாலில் உயிர்குடிக்கும்நஞ்சின் தன்மைஇருக்கிறது—இருப்பதைக் காண்கிறோம். ஐயையோ, சொல்ல வெட்கமாகுதே, நூந்த அறிவிழந்த ஏடுகள் மீது கோபம், கோபமாகுதே! — என்று ஆவேசப் பாவிசைத்து ஆத்திரக் கூத்தாடுகிறது நம் மனம்—வெந்து தணிகிறது, வேதனையை உமிழ்கிறது, இந்த நாட்டு நல்லறிவாளரின் சிந்தனை!

நம் நாட்டில் வருகிற எந்த ஏட்டை எடுத்துப் புரட்டினாலும் இந்த அலங்கோலத்தை — அவலட்சணத்தைப் பார்க்கிறோம். அழுகுரலைக் காமக் கேட்கிறோம், அடுக்குமா, இந்த அநீதி, ஆகுமா, இந்த அக்ரமப் போக்கு, அடிக்குமேல் அடி, வெட்டுக்குமேல் வெட்டு, குத்துக்குமேல் குத்து கொடுத்து மீசையை முறுக்குகின்றனமே ஒரு மூடன், [illegible] பிறகுங்கூட, அதும்பால அறிவி[illegible]மூழ்ந்து அல்லல் குகையில் அல்லாடித் திரியும் மக்களை மேலும் அதே தொல்லைக்காளாக்கலாமா? இதுதான் 'பேனாக்களின்' வேலையா? ஏட்டுப் பறைகளின் இன்றியமையாத தொண்டா? உரத்த குரலரும், ஊர திரிந்த ஊற்றுமைக்குழலரும் இந்த மௌடீகப் பாதையில மக்களை இழுத்துக்கொண்டு சென்றால இந்த மக்களின் கூட்டம் உருப்படும் நாள் எந்நாள்?

சோதிடமாம், வரப்போகிற நன்மை தீமைகளை, நாளால, நட்சத்திரத்தின் துணைகொண்டு, லக்கினத்தின் போக்கினை யறிந்து முன்னரே சொல்லுந்திறன் கொண்ட வல்லவர்கள் உள்ளனராம், அவர்கள் தருகிறார்களாம் செய்திகளை, அதைப் போடுகிறதுகளாம். இந்தக் குணங்கெட்டு, நாட்டு மக்களின் நல்வாழ்வில் துளியும எண்ணமில்லாத, தங்கள் பண வீக்கத்திற்கும், அதற்கான ஆக்கவேலைகளில், தயக்கமின்றி, தடக்கத்தை நீக்கி, துவக்கத்திலிருந்து முடிவுவரை மும்முரமாக ஈடுபட்டு வேலை செய்வதில் கொஞ்சமும் இளைக்காத ஏடுகள்—இரும்புப பெட்டிகளின் இதய கீதமான ஏடுகள் — முதலாளிகளின் முணு முணுப்பை மட்டும் ஒலி பரப்பும் தந்திரக் காகித வாயாடிகள்—ஏழைக்கு உழைப்பதாக பகல்வேடம் போடும் பசப்புக்காரத் தங்கங்கள்—பதிவிரதைபெனப் பாசாங்கு செய்யும் 'பச்சைகள்'!

நட்சத்திரம், லக்கினம், திதி இப்படி, அப்படியெனக் கூறி, சுய சிந்தனையைச் சோரம் போகவிட்டு, சோம்பேறியாய், சொந்த புத்திக்குத் துளியும் மதிப்பளிக்காமல் மக்கள் நாள் பார்த்துக்கொண்டேயிருக்கவும், மற்ற நாடுகள் கேலி செய்து, கெக்கொலி கொட்டி நகைக்கவும் [illegible] படுத்திவிட்டன, இந்த இரக்கமிலலா ஏடுகள், கொஞ்சமும் நாட்டு நன்மையில் நாட்டமில்லாத பத்திரிகைகள்! சோதிடப் பகுதியைக் கொண்டே சோற்றுக்கு வழி தேடுகின்றனவாம் இந்த 'சொரணைகெட்ட' எழுத்துக் கூச்சல்கள்!

இன்று மரண யோகத்தின் காரணமாக சுபகாரியங்கள் செய்யவோ, அல்லது புதிய முயற்சிகள் செய்யவோ ஏற்ற நாளாக இல்லை.

பகல் 12 மணிக்கு மேல் முக்கிய இடங்களுக்குச் செல்லவும், பண வசூலில ஈடுபடவும் ஏற்ற சமயமாக உள்ளது.

இப்படிக் காலத்தைப் பற்றியக் கணக்கணிப்பை, ஒரு 'பஞ்சாங்கம் புரட்டி' நடத்துவதை நாம பார்க்கிறபொழுது சிரிக்கிறோம் ஒரு சமயம், அழுகிறோம் மற்றொரு சமயம்!

நிமிடத்தை, மணியை, நாளை, வாரத்தை, மாதத்தை, ஆண்டைப் பற்றி மற்றைய உலக நாடுகளில் பேசுகின்றபொழுதெல்லாம் வீணாக்காதே, கழிந்த காலம் திரும்ப வராது என்று பேசுவர்.

நேரத்தை வீணாக்காதே, மீண்டும் வராது போனபொழுது! முயற்சி செய், விடாதே, அலுக்காதே, சலிக்காதே! வெற்றி நிச்சயம்! தோல்வி கண்டு துவண்டு விடாதே, அவைகள் வெற்றி மாடிக்கு இட்டுச் செல்லும் படிக்கட்டுகள்......இப்படிக் காலத்தைப் பொன்னாக்கும் கருத்துரைகளைத் தந்து மக்களை மாக்களாக்காமல் வாழவழி தந்தார்கள்—தருகிறார்கள் மேலைநாடுகளில்.

நம் நாட்டவருக்கு இந்தக் கருத்துகள் புதியனவல்ல, புரியாத போதனைகளுமில்லை. தெரியும்—மறந்துவிட்டார்கள்! புரிந்தும், பின்பற்றி நடவாத உண்மைகளாக்கிவிட்டனர்!

உழைப்பில் வாரா உறுதிகள் உளவோ? நாளும் கேட்கிறோம், இந்த நற்கருத்தை! முயற்சித் திருவினையாக்கும், முயற்சி யின்மை இன்மை புகுத்திவிடும், ஊழையும் உட்பக்கம் காண்பர், தாழாது உஞற்றுபவர், இத்தகைய குறள்வரிகளை கேட்டசெவிகள்தாம் நம் தாயகத்தில் உலவுகின்றன.

ஆனாலும் இன்று இந்தப் பஞ்சாங்கந் தாங்கிகளின் பக்கம் சாய்ந்துள்ளனர் மக்கள்,, பகுத்தறிவினிடம் பகைத்துக்கொண்டு!

இன்றைய சந்திரன் குரு சாரத்தில் வருவதால் தங்கம், வெள்ளி, கடலை, மொச்சை முதலியவைகளின் விலை உயரக்கூடும். சணல், பருத்தி, கருப்புநிறச் சாமான்கள் முதலியவைகளின் விலை குறையலாம்! உத்தியோகத் துறைகளிலுள்ளவர்களுக்கு சில நன்மைகள் உண்டாகலாம்......

இப்படி, ஆரூடக்காரர்களாக, வியாபாரிகள் மாறிட ஏவுகிறார்கள் புராண அறிவுக்காரர்கள். உற்பத்தி நிலையை மறந்துவிட்டு, எடுத்துச் செல்லும் வாகன வசதியைக் கவனிக்காது விட்டு விட்டு, வெளிநாட்டு இறக்குமதி, ஏற்றுமதி பற்றி கவலையுமின்றி, சந்திரன் போக்கிலே தங்கள் வணிகத் தொழிலை வைத்துக்கொள்ளத் தூண்டும் பித்தலாட்டப் பிரச்சாரம் செய்யப்படுகிறது.

பாமரரைப் பழி வாங்கும் பகிரங்க புளுகுகளைப் பயமின்றிப் போட்டுத் தங்கள் 'வயிறு நிறைக்கும்' வகைகெட்ட வேலைகளில் ஈடுபடுகிறார்களே, இந்த நாட்டு ஏட்டு வேந்தர்கள்! மக்களை வீரர்களாக, விவேகிகளாக மாற்றவேண்டிய எழுத்து மன்னர்கள் இப்படி மூடமதியினராக, முன்னேற்றம் என்பதை கண்டு தரிசிக்கும் நிலையைக் கூட நினைக்காத, எண்ணிப் பார்க்கவும் எட்டாத பயங்கரப் படுகுழியில், மூடநம்பிக்கையென்னும் இருட்கிடங்கில் தள்ளுகிறார்களே, என்று எண்ணும்பொழுது திகைக்கிறோம், திணறுகிறோம்—மூச்சடைத்து, பேச்சற்று பிம்பங்களாக நிற்கிறோம்.

மேஷ ராசிக்காரர்களுக்கு சில காரியங்களில் விசேஷ பலன்கள் ஏற்படக்கூடும். ஸ்திரீகள் உதவியால் நன்மைகளும் உண்டாகும்.

மிதுன ராசிக்காரர்களுக்கு இன்றைய சந்திரன் இருக்கும் நிலையால் பண நெருக்கடி அதிகமாகத் தென்படும்.

இப்படி எழுதி, ஏழைஎளியதுகளை உழைப்பவர்களைக் கெடுத்து அவர்கள், மேஷத்தை, மிதுனத்தை, துலாவை, தனுசுவைத் துருவித் துருவி ஆராய்ந்து, காலத்தைக் கவைக்குதவாதக் காரியத்திலேகழித்திடும் கோரக் காட்சியை காணும் பொழுது எப்படியிருக்கும், அறிவியக்க ஆர்வலர்களுக்கு! இந்த சோதிடப் பகுதியைபபோடும் வானு, மூனுக்கள் மீது ஆத்திரம் பிறக்காதா?

* * *

அறுபது ஆண்டுகளுக்கும், அர்த்தமற்ற கதைகள்!—ஆபாசமான விளக்கவுரைகள் — நாரதர் பெண்ணாகி, கோகுலவாசி, குழல் ஊதி, கோதையர்களுடன் கூடிப்பாடிடும் கோபாலகிருஷ்ணனுடன் அறுபது ஆண்டுகள் அனுவித்த இன்பத்தின் அறுவடைகள்தாம் அறுபதாண்டுகள்! பன்னிரண்டு மாதங்களுக்கும் பக்குவமான விரிவுரைகள் — நாட்களிலேயே கோளாறுகள்! வெள்ளி கலகநாள், சனி, நளனைப் பிடித்த ஏழரை நாட்டுச் சனியனை நினைப்பூட்டும் ஆகாதநாள், செவ்வாயோ வெறுவாயோ, வியாழன் விடியாது—இப்படி ஒரு 'ஓட்டை' சொல்லுவார்கள்! பொன் கிடைத்தாலும், புதன் கிடைக்காது என்று சிலநாட்களுக்குச் 'சப்பைக்கட்டு!' இவர்களே பேசுவார்கள், ஆண்டவன் வைத்த நாளிலே எதுகெட்டது, எது நல்லது என்று!

நிமிடத்திற்கு நிமிடம் முட்டுக்கட்டைகள், முன்னேற்றத்திற்கு எதிரான தடைக்கற்கள்! எமகண்டம், குளிகை, இராகுகாலம் என்று பேசிக் காலத்தைப் பாழாக்கப் பழகிவிட்டார்கள். அதை மாற்றவேண்டிய "ஏடு தரும்" எழுத்துச் செல்வர்களோ, அதை விளக்கினார்கள் மேலும், மேலும் — அதுவும் இன்னும் ஆழமாக, அகலமாக!

வடக்கே சூலம், தெற்கே சூலம்—என்று கட்டைப்போடுவார்கள்! அஷ்டமி, நவமியில் ஆகாது கூடாது எந்தக்காரியமும்!—இப்படி ஓலமிடும் குரல் இன்னமும் ஒலிக்கிறது — அதன் குரலும் பலிக்கிறது!

கல்லூரிக்கட்டிடங்களை, காலட்சேப மண்டபங்களாக்கி, பொதுமேடையை பூசாரிக்கூடமாக்கி, பேச்சை, நாவணிகரின் நல்ல கடையாக்கி இந்தநாட்டுமக்களின் அறிவை ஆழமான சவக்குழிக்கு அனுப்பியபடியே இருக்கின்றனர் — சிலர்— அவர்களின் வாழ்விற்கு அந்தப் பழையகால எண்ணங்கள், ஏற்பாடுகள் நிலைத்திருக்கவேண்டியதால்! சடசடவென சரியுது பார், இந்த சாரமற்ற பேச்சுக்காரரின் தந்திரத் திட்டங்கள்! மட மடவென வளர்ந்தோங்கி இருள் போக்கி திரியுது பார் பகுத்தறிவு பகலவனின் கதிரொளிகள்!......என்று இந்நாட்டுப் பாவலர்கள் பாடிடும் நிலை பிறக்க வேண்டும்.

X X X

சோதிடப் பகுதிக்கென்று, தமிழில் வெளிவரும் மாத, வார இதழ்கள் மட்டுமல்ல; அன்றன்றுடைய செய்திகளை மக்கள் மன்றத்திற்கு அளித்து அறிவொளி பரப்ப வேண்டிய பொறுப்பும், கடமையும் நிரம்பிய தினசரி இதழ்களில்கூட இன்று சோதிடப் பகுதிக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

தினசரி
தினத்தந்தி
காண்டீபம்
பிரசண்டவிகடன்
சுதேசமித்திரன்
பாரததேவி
தினமணி கதிர்

முதலாய முக்கிய தினசரி, வார இதழ்களில் இன்றுசோதிடத்துக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் மிக மிக அதிகமானது. இந்த இதழ்களை ஏற்று நடத்தும் பொறுப்பு கொண்டவர்களில பலர் பகுத்தறிவு மிக்கவர்கள்—மூடக் கொள்கைகள் முறியடிக்கப்பட வேண்டுமென்பதில் மங்கா ஆர்வம் படைத்தவர்கள், இளைஞர்கள்—எனினும் இந்த இதழ்களில 'சோதிடப் பகுதி'தான் தங்கள் பத்திரிகை விற்பனையாகும் வழியெனக் கருதுகின்றனர்.

சில பத்திரிகையாசிரியர்களை இது சம்பந்தமாகக் கேட்டபோது, அவர்கள் சிறிதும் கலக்கமின்றி

சிரித்தபடியே பதில் சொல்லினர், 'என்னங்க! சோதிடத்தில் எங்களுக்கு மட்டும் நம்பிக்கையோ? என்னவோ, அது இல்லையென்றால் பலர் குறைபடுகின்றனர், விற்பனை குறைகிறது. என் செய்வது!" என்று, பதில் தந்தனர்—தங்களது சேவை இவ்வளவு 'சில்லரை'யாகச் சிதறுகிறதே என்று சித்தங்கலங்காமல்!

மக்களுக்குச் சேவை செய்து அவர்களை மடைமைப் பாதையிலிருந்து மீட்கவேண்டியதை கடமையெனக் கொண்ட எழுத்துச் சிற்பிகள் கூறுகிறார்கள் 'பத்திரிகை விற்பனையாக சோதிடப் பகுதி தேவைப்படுகிறதாம்'!

சோதிடப் பகுதி இல்லாத பத்திரிகைகள் காற்றில் பறந்துவிடவில்லை! 'கல்கி' 'ஆனந்தவிகடன்' 'கலைமகள்' முதலான சஞ்சிகைகளும், 'இந்து'வும் 'மெயிலும்' எடுப்பாரற்ற தாட்களாகவும் ஆகிவிடவில்லை! சோதிடத்தையும், சூதுக் கொள்கைகளையும் மட்டுந்தட்டும் நமதியக்கப் பத்திரிகைகள் நாட்டில் நடமாடவே செய்கின்றன —எல்லோரும் வியக்கும் அளவில், பெருமிதமாக!

எனினும் 'எழுத்தைத் தொழிலாகக் கொண்டோர்', தங்கள் எழுத்தில் நம்பிக்கை வைக்காது 'சோதிடத்தைத்' தேடுகின்றனர்!!!

x x x

"மாய மோதிரம் இது மங்கையரை வசீகரிக்கும்"

"மந்திர உச்சாடனம் செய்யப்பட்ட தாயத்து—சகல சம்பத்துக்களையும் தரும்"

"ஜாலக் கண்ணாடி—ஈரேழு பதினான்கு உலகங்களையும் காணலாம்"

இதுபோன்ற விளம்பரங்கள் பெரிய பெரிய அளவுகளில்!

மக்கள் மனதை எளிதில் மயக்கச் செய்யவும் இதுபோன்ற விளம்பரங்களும், வேடிக்கைச் செய்திகளும், 'நமது நிருபர்' அளிக்கும் "அதிர் வேட்டுத்" தகவல்களும் இன்று கிட்டத்தட்ட எல்லா இதழ்களிலும், அதிகரிக்கத் துவங்கிவிட்டன.

எங்கெங்கும் செய்திகள் மக்களிடை பரபரப்பையும், 'அப்படியா,சங்கதி?' என்ற ஆச்சரியத்தையும் எழுப்புமோ அவைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன.

ஆத்தூர்

வால் முளைத்த சாமியார் வருகிறார் என்ற வதந்தியால் ஒவ்வொரு வீட்டிலும் வேப்பிலை கட்டப்பட்டிருக்கிறது. பெண்கள் கையில் வேப்பிலை தாங்கியவண்ணமே நடக்கின்றனர். குழந்தைகள் சட்டைப்பையிலும் வேப்பிலை வைத்திருக்கின்றனர்.

செய்யார்

கொம்பும் வாலும் முளைத்த சாமியார் வருகிறார் என்ற பயத்தினால் மக்கள் வீடுகளின் இருபுறங்களிலும் வேப்பிலைகளை சொருகி இருக்கின்றனர்.

சென்னை

"நான் நள்ளிரவில் தேக வியோகம் அடையப் போகிறேன்" என்று ஜோஸ்யம் கூறி ஒரு சாமியார் பரலோக யாத்திரைக்குத்தயாராகி வருகிறார். கோடம்பாக்கத்தில் ஒரு காளி கோயிலின் அருகில் ஏழடிப் பள்ளத்திற்கருகில் அவர் தியானத்தில் இருக்கிறார்.

சீதாராமராஜு என்ற இச் சாமியாரை உயிருடன் புதைத்துவிடாதபடி போலீசார் கண்காணித்து வருகின்றனர்.

சபரிமலை

துஷ்டர்களால் சுட்டெரிக்கப்பட்ட சபரிமலை அய்யப்பன் கோயிலின் கர்ப்பக்கிரகத்தில், புரோகிதர் சென்று நாசமடைந்து அலங்கோலமாகக் கிடந்தவற்றை எடுக்கையில் 12 அடி நீளமுள்ள பெரிய பாம்பு ஒன்று உடைந்துபோன விக்ரகத்தின்கீழ் படுத்துக் கொண்டிருந்தது. சுற்றியிருந்தவர்கள் அப்பாம்பைத் தாக்க கற்களை எடுத்தனர். ஆனால், திருவாங்கூர் தேவஸ்தானம் போர்டின் தலைவர் பி. ஜி. என். உன்னித்தன், மெல்ல அந்தப் பாம்பினிடம் சென்று அதன் படத்தைத் தட்டிக்கொடுத்து "அய்யப்பா, தயவு செய்து போ" என்று உரத்தகுரலில் சொன்னார். அந்தப் பாம்பும் அவர் காட்டிய திசையில் மெல்ல நகர்ந்து சென்றது.

இதுபோன்ற செய்திகள்! பிரமாதமான தலைப்புகளுடன் பிரசுரிக்கப் படுகின்றன — கட்டம் கட்டியும், பெரிய எழுத்தில் அச்சுகோர்த்தும், இந்தச் செய்திகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு வருகிறது.

திடீர்வேட்டுகள், புரியாத புதிர்கள், நடக்கமுடியாத தகவல்கள் — இவைகளைப் பிரசுரிப்பதில் இந்தப் பத்திரிகைகளுக்குள்ள பேரார்வத்தைக் கண்டால் பித்தனும் நகைப்பான்!

அதிசயச் செய்திகள் என்றால் மக்கள் ஆர்வங்கொண்டு பார்ப்பர்,

(9-ம் பக்கம் பார்க்க)

ஜூலை 9-ல்

'திராவிடன்' இதழ்

வளர்ச்சிக்காக

சென்னை ஒற்றைவாடை தியேட்டரில்

கே. ஆர். ராமசாமி

சி. என். எ. குழுவினர்

நடிக்கும்

"சந்திரமோகன்"

நடைபெறும்.

திராவிட நாடு

ஞாயிறு 2—7—50 காஞ்சி

ஒன்பதாம் ஆண்டு

"காற்றடிக்குது, கடல் குமுறுது, கப்பலும் பிரயாணத்தைத் துவங்கி விட்டது" என்று கவலையோடு, கஷ்டங்களைப் போர்த்திக்கொண்டு, புன்சிரிப்போடு புறப்பட்ட நமது இதழ், இன்று ஒன்பதாம் ஆண்டின் உதய வாயிலில் நிற்கிறது!

எட்டு ஆண்டுகள்—துயர மேகங்கள், தொல்லை தரும் மின்னல்கள், துடித்து வெடித்த சோக நிகழ்ச்சிகளினூடே ஓடிவிட்டது! உலக வானத்தின் வண்ண நிலவென வளர்கிறோம் — இருண்ட சமுதாயம், மருண்டு நிற்கும் மக்கள், சுருண்டு கிடக்கும் வாழ்வினரின் துயர் கிழிக்கும் வேகத்துடன்!

தொல்லைகள், சுயநலமிகளின் சொக்கட்டான் ஆட்டம், இச்சகம் பேசி ஈட்டி வீசுவோர், இறுமாப்பால் இழித்துப் பேசுவோர், 'இருக்குமா, இறக்குமா?' என்று ஆரூடம் கணிப்போர் அத்தனை பேரையும் துச்சமெனத் தள்ளி, "அச்சமில்லை! அச்சமில்லை!" என்ற கர்ஜனையை கானமாகக்கொண்டு, புதுவருட வாயிலில் நிற்கிறோம்—பூரிபபோடு!

பூக்துக் குலுங்கும் நம் இதயத்தில, நமது இதழ் இதுவரை தாங்கியும், தாண்டியும் வந்திருக்கும் தொல்லைகள், மின்னி மறைகின்றன!

துவண்ட சமுதாயத்துக்காகத் தொண்டாற்றப் புறப்பட்டோம் 8—3—'42 அன்று! தொல்லைகள், துயர்தரும் சங்கடங்கள் மலிந்த நேரம், எனினும்—துணிவு துணையாக நின்றது!

சந்தனக்காடு நம்நாடு, ஆனால், இன்று அது சாவுக்காடாகிவிட்டது—சனாதனமும், ஜாதீயமும், வைதீகமும், வஞ்சகர் வாவும் சிதைத்துச் சின்னாபின்னமாகிவிட்டன. சிங்கம்—சிறுகூண்டிலே அடைபட்டு விட்டது! திராவிட சமுதாயம் மூடநம்பிக்கைக் கூண்டில் மூடப்பட்டுவிட்டது!

இந்த மோசமான நிலையைத்தரைமட்டமாக்கி சமதர்மம் தழைக்கப் பணியாற்றுவதே நம் கடமையென்று புறப்பட்டோம்.

நமது வருகையைக்கண்டு வைதிக புரி வாடியது! சனாதனம் சீறியது! உழைக்காது வாழ்வோர் உறுமினர்! உயரப்பர், 'இதுகளால் முடியுமா?' என்று எக்களித்தனர்! ஈரமிலலா இதயத்தினர் "ஈட்டியைப் பாய்ச்சுவேன்!" என்று எக்காளமிட்டனர்!

இது எல்லாம் நமக்கு தூசியாயிற்று; மேகங்களைக் கிழித்த உலவும் வெண்ணிலாவாகப் பவனி வருகிறோம்—எட்டு ஆண்டுகளைக்கழித்துவிட்டு, 'ஒன்பது' நோக்கிப் புறப பட்டுவிட்டோம்!

X X X

வேதனையும் சோதனையும்நிறைந்த காட்டுப்பாதையில் எடுத்தடிவைத்த நாம், இதுவரைத் தாண்டிவந்துள்ள துயரசமுத்திரங்களை எண்ணினால் இதயம் பூரிப்பால் விம்மும்!

புகையும் எரிமலைபோல, ஒவ்வொரு ஆண்டும் புதுப் புதுப் பிரச்னைகள்!

முதலாவதாண்டு

பிறந்த நம்மைச் சுற்றி, ஏமாந்தால் எடுத்து விழுங்கும் கழுகுகள் காத்துக் கிடந்தன! எனினும், நமது பணியை நாம் விடவில்லை; வேகத்தைக் குறைத்துக் கொள்ளவுமில்லை! ஜீயர்கள், மகந்துகள், தம்பிரான்கள், சன்னதிகள் முதலாய சமுதாய விரோதிகளின்—சவுக்கடியாக இருந்தோம். காங்கிரஸ் பலிபீடத்தின் கடுமை கொடுமைகளைக் காட்டினோம். முத்தமிழ் கற்றோரே, வாரீர் பகுத்தறிவுப் பணிக்கு என்று முரசறைந்தோம்!

இரண்டாம் ஆண்டு

அகமும் புறமும் துயரக் கடலாக இருந்தது. எனினும் துள்ளிடும் வேலாக உலவினோம்! 'கம்பரசம்' தந்தோம், காவியப் பெயரால் களங்கத்தைக் கற்பிக்கும் புராணங்களின் பொய்ப் பித்தலாட்டங்களை விளக்கினோம். வெகுண்டனர் புலவர்கள்! நாவலரும் பாவலரும் 'நாஸ்தீகா' என்று ஏசிச் சிரித்தனர்! 'நல்லதல்ல' என்று எச்சரித்தனர்—பின் எதிர்த்தனர்! எனினும், நமது பணி பரவியது — மாணவருலகு நம்மை கரம் நீட்டி அணைத்தது!

மூன்றாவதாண்டு

பட்டுப் பூச்சிகள், 'பணம் பெருத்தான்'கள், தேர்தல் கிளிகள், ஜரிகைக் குல்லாய்கள், சந்தர்ப்பப் பறவைகள்—வளரும் இயக்கத்தை விட்டு—வெளியேற்றப்படவேண்டும் என்று பாடுபட்டோம். 'சேலம்' நடந்தது! வெற்றி, வெற்றி என்று முரசுகொட்டியது வீரர் படை. 'பார்க்கிறேன் ஒரு கை' எனச் சீறினர் அந்த மாஜிகள்! சிக்கல நம் சேனைக்கு உரம் தந்தது. 'பிரச்னை'யில் வெற்றிகாண போராடினோம். மிரண்டு ஓடின சந்தர்ப்பப் பறவைகள்!

நான்காம் ஆண்டு

மக்களை ஆட்டிப் படைத்த போர் முடிந்தது — இந்திய உபகண்டம் 'காங்கிரஸ்' கையில ஒப்படைக்கப்படுவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. தாயகமாம் திராவிடத்தின் கதி கண்ணீர் சிந்தும்படியாயிற்று! நம்கருத்தைஎதிரொலித்தோப-நாடு 'வெள்ளையரிடமிருந்து-வடவர்'ஆதிக்கத்துக்கு உட்படுகிறது என எச்சரித்தோம்! வேதனைப புயல சிருஷ்டிக்கப்படுவதை விளக்கினோம். சுயநலமிகள் வலையில் திராவிட சமுதாயம் அகப்படக்கூடாது — அது ஆபத்து — என்ற கருத்துக்களை ஆதாரங்களோடு பரபபினோம்!

ஐந்தாம் ஆண்டு

நாடு, காங்கிரஸ் ஆளவந்தாரின் கையில் சிக்கியது. உரிமை பேசி பீடமேறியோர் துப்பாக்கியையும் தடியையும் துணைகொண்டனர்! தென்னாட்டை, வடநாட்டுக்கு அடிமைப்படுதத அப்போதைய பிரதமர் "பிரகாசம்" திட்டம் தீட்டினார்! தென்னாட்டில் ஆலைத் தொழில வளராதபடி, வகைகள் செய்ய வழிகள் வகுத்தார். இது கேடு என்பதை எடுத்துக்காட்டினோம்—கண்டித்தோம். கனவெனப் பேசப்பட்ட 'பாகிஸ்தான்' தனி நாடானதைக் காட்டி நமது இலட்சியக் கோரிக்கை கானல் நீராகி விடாது என்று கூறினோம்! பிரிவினைக் கிளர்ச்சிக்கான ஆதாரங்களைத் திரட்டித் தந்தோம்.

ஆறாம் ஆண்டு

'ஆகஸ்டு பதினைந்து' நடைபெற்றது, வெள்ளையர் வெளியேறினர்—இது பற்றிய கருத்தைப் பகிரங்கமாக வெளியிட்டோம். நிலைமையைத் தனக்குச் சாதகமாக்க விரும்பியவர் தூற்றல் புராணம் படித்தார்கள்—இயக்கத்துக்கு ஆதரவு தேடி பாடுபடும்போது எதிரிகள் வீசும் ஆத்திர அஸ்திரங்களைத் தாங்கிக் கிடக்கும் நமக்கு 'புதுச் சுமை'யையும் தாங்க நேர்ந்தது.

ஏழாம் ஆண்டு:

காங்கிரஸ் ஆட்சியினர் 'இந்தி'யை நுழைத்தனர். அறப்போருக்கு நாட்டை அழைத்தோம்! எதிர்த்தோம். அடக்குமுறை அம்புகள் பாய்ந்தன-நம் இயக்கத்தின் மீது! காவியங்களுக்குத் தடை, எழுத்துரிமை பறிக்கப்பட்டது, நம்மையும் 'எடு மூவாயிரம்' என்று ஆட்சியாளர் கேட்டனர். வேதனை தாண்டவமாடிற்று, காங்கிரஸ் சர்க்காரின் 'கருணை' நம்மீது பாய்ந்தவண்ணமே இருந்தது. வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சப்பட்ட வண்ணமேயிருந்தது நம் இயக்கத்தின்மீதும், நம்மீதும்! எனினும், கலங்கவில்லை, 'எதையும் தாங்க இதயம் உண்டு' என்று பணிபுரிந்தோம்.

கடந்த ஆண்டு

ஆரம்ப இதழே, தலைவரின் தகாப் போக்கால் நம்மிடையே விளைந்த வேதனையைத் தாங்கி வெளிவந்தது.

மக்களின் 'கண்ணீர்த்துளிகளை'க் காட்டி, தம் போக்கை மாற்றிக் கொள்ளுமாறு தலைவரை வேண்டினோம். அவர் முரண்டினார்—'பட்டங்கள்' சூட்டினார். பெரும்படையினர் பிரிந்தனர் — திராவிட முன்னேற்றக் கழகம் உதயமாயிற்று! கழகத்தின் 'கண்ணிமை'யானோம்.

மக்கள் உரிமைக்காகப் பாடுபட்ட நம்மீது வீசப்பட்ட அடக்குமுறை அம்பை எதிர்த்து "நீதி" கோரினோம் — நீதி கிடைத்தது! 'மூவாயிரம், ஜாமீன்எடு!'எனமிரட்டியஆளவந்தாரின் அடக்குமுறைப் போக்கு எத்தகைய அழிவுப் பாதையில் செல்லுகிறது என்பதை உலகுக்கு உணர்த்தினோம்!

X X X

எட்டு ஆண்டுகள்—அத்தனையும் வேதனையும் சோதனையும் நிரம்பியது. ஒவ்வொரு ஆண்டிலும், மேற்குறிப்பிட்டது போன்ற ஒவ்வொரு 'பிரச்னை'களைச் சமாளிக்க வேண்டியதாகிவிட்டது!

முள்ளும் கல்லும் நிரம்பிய பாதையில் இலட்சியபுரி நோக்கி எடுத்தடிவைத்த நமக்கு — நம்மை எதிரிகளென எண்ணிக்கொண்டோரும், ஆளவந்தாரும்—தந்த தொல்லைகளும் துயரச் சம்பவங்களும் ஏராளம். அத்தனையையும் தாண்டி, ஏறு நடை போட்டு, இன்று ஒன்பதாம் ஆண்டில் நுழைந்திருக்கிறோம்.

(13-ம் பக்கம் பார்க்க)

பத்திரிகையாளரே!

7-ம் பக்கத் தொடர்ச்சி

அதோடு 'அறிவுக்கு முரண்பாடானவை — நிச்சயம் நடக்க முடியாதவை' என்று நம்போன்றோர் செய்துவரும் அறிவுப் பிரச்சாரத்துக்கும் ஒரு சவுக்கடியாகவிருக்கும் என்ற ஒரே எண்ணத்தின் மீதே இதுபோன்ற செய்திகளுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

சுயமரியாதை இயக்கத்தினரின் புயல்வேகப் பிரச்சாரத்தைப் புதைத்துவிடலாம் இதுபோன்ற பொய்மூட்டைகளைப் பிரசுரிப்பதன் மூலம் என்ற பொல்லா நோக்கும், எப்படியாவது காசு கிடைத்தால் போதும் என்ற கீழ்த்தர நோக்கமும் இவைகளைச் 'சில்லரை'களாக்கி விடுகின்றன.

அய்யப்பன் கோவிலில் பாம்பு வந்துபோன செய்திக்கு அவ்வளவு பிரமாதமான முக்கியத்துவம் தரப்பட்டது. ஆனால் செய்திவந்த இரு தினங்களுக்கெல்லாம் திருவாங்கூர் பிரதமரே அந்தச் செய்தி ஆதாரமற்றது என்று அறிக்கை விடுத்துள்ளார்.

அதே போலவே, கோடம்பாக்கம் சாமியார் தான் குறிப்பிட்ட தினத்தன்று இந்த இகலோகத்தை துறந்து பரலோகம் போய்விடவில்லை! சாமியார் சாகப் போவதைக் காண மக்கள் கூடியிருந்தனராம் — ஆனால் அவர் குறிப்பிட்ட நள்ளிரவு கடந்து வெகு நேரமாகியும் 'தேக வியோகம்' ஆகவில்லை! சீறியிருக்கின்றனர் மக்கள் "தெகிடுதத்தக்காரா! ஜோதியில் ஐக்கியமாகப் போவதாகச் சொன்னாயே—ஏன் இன்னும் சமாதி அடையவில்லை!" என்று சாமியாரை நோக்கிப் பாய்ந்திருக்கின்றனர். சாமியாரோ, "ஆத்மாவை அய்யன்பால் வைத்து அசையாது மௌனநிலையிலிருப்பேன் என்று சொன்னேனேயொழிய, செத்துவிடப் போவதாகச் சொல்லவில்லையே" என்று ஏதேதோ ஏமாற்று வார்த்தைகளைக் கொட்டியிருக்கிறார்-வேஷதாரியின் மோசப் பேச்சில் மயங்கிய மக்களோ, கொதித்து எழுந்திருக்கின்றனர் அக்கோவணாண்டியை நோக்கி. மக்களுக்கும் —சாமியாருக்குமிடையே போலீசார் வந்ததால நிலைமை கட்டுக்கடங்கி யிருக்கிறது.

சபரிமலை அய்யப்பன் ஆலயத்தில் தீ பிடித்ததற்குக் காரணம் அக்கினி தேவனின் கோபந்தான். ஏனெனில்எல்லா ஆலய விக்கிரகங்களும் கிழக்கு திசையை நோக்கியிருக்க இந்த ஆலய அய்யப்பன் தென்திசை நோக்கிப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது.

அய்யப்பன் கோவில் தீ மூட்டப்பட்டு, சிலைகள் சின்னபின்னமாக்கப்பட்டதற்கு, இதுதான் காரணமாம்! யாரோ 'புண்யாத்மாக்கள்' கூறினவென்று பத்திரிகையாளர் பிரசுரித்திருக்கின்றனர் ஆனால் திருவாங்கூர் சர்க்காரோ விசேஷ போலீஸ் அதிகாரியை அனுப்பியிருக்கின்றனர், புலன் விசாரணைக்கு! அக்கினி தேவனின் கோபத்தால் ஆலயத்தில தீ மூண்டதென்றால் 'சாமியே சரணம் அய்யப்பா' என்று சகலரும் தொழும் அய்யப்பனின் சக்தி 'அந்தர்த்யானமாகி' விட்டதோ என்று மக்கள் எண்ணமாட்டார்களா என்ற நினைப்புக்கூடவாவில்லை — செய்தியைச் சிங்காரமாகப் போட்டிருக்கின்றனர்!

அச்சுக் கோர்ப்பவர்கூடச் சிரித்திருப்பார், பிழை திருத்துபவர் 'இதென்னப்பா கேலிக்கூத்து' என்று எண்ணியிருப்பார்! அத்தகைய வேடிக்கையான விசித்திரச் செய்தி — எனினும் 'சப் — எடிட்டர்கள்' தந்திருக்கின்றனர், ஆசிரியர் அகமகிழ்வார் நம் திறமை கண்டு என்ற சபல நினைவுடன்!

பத்திரிகை மக்களின் அறிவுத் தூதவன்! தன்செய்திக் கதிர்களால் அகில உலகத்தையும் அன்றாடம்

மக்களுக்குத் தரும் அளவிலா பெருமை வாய்ந்தது. அதில், இது போன்ற விசித்திரச் செய்திகள்! பிறந்ததும் சாகும் குழந்தைபோல, இதுபோன்ற 'அதிர்வேட்டு'ச் செய்திகள் பிரசுரமாகிய நாலைந்து நாட்களுக்குள்ளேயே இவைகளின் 'குட்டு' சந்தி சிரிக்கிறது! எனினும், சஞ்சலமில்லாது பிரசுரிக்கின்றனர்-பத்திரிகையாளர்கள்.

மாத இதழ், வார இதழ், தின இதழ் இப்படிப் பலப்பல ஏடுகள் படுகுழியில் தள்ளும் பயங்கரப் பகுதிகளைப் போட்டு வாழ்வைப் பாழாக்கி மக்களைச் சோம்பேறிச் சோணுசலங்களாக, கொட்டாவிக் குப்பன்களாக, தூங்குமூஞ்சிகளாக, துயர பிம்பங்களாக ஆக்கும் திருச்சேவையில் ஈடுபட்டு வருகின்றன—பண ஆசையாலும், சுயநல எண்ணத்தாலும்!

இத்தகைய வேதனைக் காட்சி விரிவது கூடாது—நாட்டின் எதிர்காலத்தை இடர்மிகுந்ததாக்கும்.

மூடநம்பிக்கை தன் கோரத்தாண்டவம் நடத்த வழியமைத்துத் தரும்.

மக்கள் மனதை மாய்த்துச் சாய்க்கும் மடைமை ஒழிந்து மறுமலர்ச்சி தனது வேக முத்திரையைப் பொறித்துக் கொண்டிருக்கிறது—உலகில். மூடநம்பிக்கை, முறியடிக்கப்பட்டு, முன்னேற்ற எண்ணங்கள் முகிழ்த்துக்கொண்டு வருகின்றன—நாள்தோறும்.

இத்தகைய சூழ்நிலையை வளமாக்கி பாதையைச் செப்பனிடும் பொறுப்பு பத்திரிகையாளர்களுடையது.

கட்சிப்பற்றோ, கொள்கைக்கு நாக்கமோ, மாச்சரிய மனப்பான்மையோ, 'சமுதாயம் முன்னேற வேண்டும்' என்ற குறிக்கோளுக்கு தடைக் கல்லாக இருக்கமுடியாது. இருக்கவும் கூடாது, பத்திரிகையாளர்களுக்கு.

பத்திரிகையாளர்கள் எழுத்துச் சிற்பிகள் மட்டுமல்ல, புதுயுகப் பூங்காவை நிர்மாணிக்கும் கொத்தர்கள்!

ஆகவே, கடமையும் பொறுப்பும் கலந்த அவர்கள் 'அற்ப' ஆசைக்காக கொள்கையில் வழுக்கி விழுவது கூடாது; அடாது; ஆகாது.

எனவே, மூட நம்பிக்கையை விரட்டியோட்டும் விவேகப் பணியில் ஈடுபடுங்கள். சமுதாயம்—சாக்கடையாக இருப்பது மாறி சந்தனக் காடாக முன்வாருங்கள்! அறிவைக் கெடுக்கும் புரட்டுச் சோதிடமும் முரட்டுப் பிடிவாதமும் மூடவெறியும் நாசமாக்கப்பட முனைந்து வேலை செய்யுங்கள்.

உள்ளத்தில் வீரமும், எண்ணத்தில் தூய்மையும் உலாமலிருக்கட்டும். இயன்றவரை சமுதாயத்தை மறுமலர்ச்சிச் சோலையாக்க முனையுங்கள்.

"சூழ்நிலை சரியில்லை, ஆகவே இயலவில்லை" என்று எண்ணினால் ஒதுங்கி நில்லுங்கள் — ஓடிக்கொண்டிருக்கும் அறிவுப் பிரச்சார அருவிக்கு அணை போடும் 'அபாய' வேலைகளில் ஈடுபடாதீர்கள்.

இந்த வேண்டுகோளை நாட்டில் மலரும் எல்லாப் பத்திரிகையாளர்களுக்கும் அன்போடு சமர்ப்பிக்கிறோம்—ஆர்வத்தோடு எதிர்பார்க்கிறோம் முற்போக்கு எண்ணமும் இளமை இதயமும் கொண்ட வாலிபர்களை, ஆசிரியர்—துணையாசிரியர்களாகக் கொண்ட தமிழகச் செல்வர்களை!

✲

வென்றிடுக!

[ஆனந்தம்]

எட்டாண்டைக் கடந்தின்று ஒன்பதாண்டை
எய்திநிற்கும் இளஞ்சிறுவா, வாழி! வாழி!!
பட்டாடை, பொன்னணிகள், பகட்டு மின்றிப்
பழங்குடிகட் கொருதுணையாய்ப் பிறந்த மைந்தா!
கெட்டாலும் கீழ்மை நிலை கருதா நாட்டின்
கிறுக்கர்கள் தருக்கெல்லாம் குறைக்க வந்தாய்!
முட்டாள்கள், வைதிகர்கள், குருக்கள் மாரின்
முதுகெலும்பை முறித்துவிட்டாய்! நன்றே வாழ்க!
என்றுமிலாப் புதுமுறுக்கை ஏற்றி விட்டாய்;
யாரென்று எம்மையெமக் குணர்த்த லானாய்
தென்றமிழிற் புது நடையை வகுத்துத் தந்தாய்;
திரைப்படத்தில், பேச்சரங்கில், செய்தித் தாளில்
உன்றன்நடை உயர்ந்ததென உறுதி யாகி,
உயிர்க்குயிராய் எழுத்தாளர்க் கானாய்! உன்னைக்,
கொன்றொழிக்கத் திட்டமிட்ட அரசாங் கத்தார்
குரங்கொன்று ஆப்பெடுத்த கதையே கண்டார்!
உன்பெயரே உருக்குலைந்த நாட்டுக் காகி,
உடைந்தமனத் திராவிடர்க்கு மருந்து மாக,
என்புருவாய்த் தேய்ந்தோரை எஃகு போலாக்கி,
எந்தவிலை கொடுத்தேனும் இலட்சியத்தை
அன்புநெறி தவறாது பெறுவோம் என்ற
ஆர்வத்தீ எமக்குள்ளே மூட்டி விட்ட
நின்பெருமைக்கு நிகரேது? "திராவிடநாடே"
நின்முயற்சி வென்றிடுக நீணிலத்தே!

சிறு கதை

பிரமநாயகம்

மாடித் தாழ்வாரத்தில் கிடந்த ஈஸிசேரில் சாய்ந்து கிடந்தார், பணவீக்கம் என்று பட்டப் பெயர் பெற்ற பிரமநாயகம் பிள்ளை. அவர் சிந்தனையிலே ஆழ்ந்திருந்தார்.

காபி டம்ளரைக் கையிலேந்திய படியே வந்து சேர்ந்தாள் பர்வதம்மாள்—அவரின் தர்மபத்தினி!

"ஏனுங்க! இப்படி முகம் வாடிக் கிடக்கிறீங்க...... என்ன யோசிக்கிறீங்க!" என்று வழக்கமான கேள்வியின் மூலம், அன்றைய பேச்சைத் தொடங்கி வைத்தாள்!

"என்னடி, பர்வதம்...நான் என்ன செய்வதென்று புரியாமல்தான் முழிக்கிறேன். யோசித்து யோசித்துப் பார்க்கிறேன். ஒரு வழியும் தோணமாட்டேன்குது" என்றார் பிரமநாயகம்!

"என்ன அப்படி வராத சங்கடம் வந்து வாட்டுது!" அவள் கேட்டாள் இப்படி, அடுத்தபடியாக!

"உன்னிடம் சொன்னேனே...... நான் ஒரு முட்டாள்—நீ படியாத பட்டிக்காட்டு மாடு! மனுசன் எக்கச்சக்கத்திலே மாட்டிகிட்டுத் தவிக்கிறான்...என்ன சங்கடம் வந்துட்டுதுன்னு கொஞ்சுறாள், குழையறாள்"

"ஆமாம், நீங்க காலேசுலே படிச்சு பட்டம் வாங்கிய பெரிய சட்டாம் புள்ளை தான்......நீங்க படிச்ச லட்சணம் எனக்குத் தெரியும்...அடிச்ச காரணங்களும் தெரியும். நீங்க விஷயத்தைச் சொல்லுங்க!"

"மில்லில் வேலை செய்கிற கூலிக்காரப் பசங்கள், கூலியை உயர்த்தினுல போச்சு! இல்லாவிட்டால் வேலை செய்யமாட்டோமின்னு மிரட்டுறானுங்க! இப்போ அவங்க கேக்கிறதைக் கொடுக்கல்லேன்னை, மில்லை இழுத்துப் பூட்டவேண்டியதுதான் போலிருக்கு நிலைமை"

"அடி ஆத்தே, மில்லைப் பூட்டிவிட்டால்...நீங்கதான் காங்கிரசிலே சேர்ந்து கதரை போட்டுவிட்டால் ஒண்ணுக்கும் பயப்படவேண்டாம்னு சொல்லித்தானே போன வருசம் அதிலே சேர்ந்துத் தொலைச்சிங்க! இந்தக் கூலிக்காரங்களுக்கு இப்படிப் பயந்து சாகிறீங்களே?"

இப்பொழுது கீழே யாரோ வரும் காலடியோசை கேட்டது!

"ஆமாண்டி, ஆமாம்! வாயை மூடு ......எவனாவது கேட்டுகிட்டே வரப் போகிறான்." என்று அதட்டி மனைவியின் ஓட்டை வாய்க்கு மூடி போட்டார்!

"அம்மா......அம்மா!" என்று கீழிருந்து குரல் வந்தது!

"சரி, குழந்தை கோமளம் பள்ளிக்கூடம் விட்டு வந்துவிட்டாள், நான் போய் காபிக் கொடுக்கிறேன்" என்று கூறிக்கொண்டே மாடிப் படிகளில் வேகமாக இறங்கிச் சென்றாள் பர்வதம்மாள்!

X X X

பிரமநாயகம், ஊரிலேயே முதல் பணக்காரர். பெரிய நூலாலைக்கு சொந்தக்காரர். பர்வதமில்ஸ் என்றால் அந்தப் பகுதியில் பேர்வாங்கிய மில்! அவருக்கு அந்த ஆண்டு கிடைத்த இலாபம் அதிகம்—ஆகவே வேலைசெய்த கூலிகள், கூலியை உயர்த்தியும்போனஸ்வேறுதரவேண்டும் என்றும் கேட்டுவிட்டார்கள்! கூலியும் உயர்த்தாமல், ஆலையும் ஓடச்செய்யவேண்டும் என்பது அவரது திட்டம். மில்தொழிலாளிகளின் மிரட்டலிலிருந்து தப்புவிக்க வழி என்னவென்று சிந்தித்துக் கொண்டிருந்தார். அப்பொழுதுதான் அவர் மனைவி இடையே வந்து அவருக்கு இருக்கும் வேதனையை அதிகப்படுத்திவிட்டுச் சென்றாள்.

அப்பா மாடியிலிருக்கிறார் என்றறிந்த கோமளம், காபியைப் பாதி குடித்துவிட்டு ஓடிவந்தாள். தந்தையைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள்.

"அப்பா, அடுத்தவாரம் காங்ரஸ் தலைவர் எங்க பள்ளிக்கூடத்திற்கு வறாராம்! வந்தால் நம்ம வீட்டிலேதானே தங்குவார்"

"ஏம்மா!"

"நீங்கதானே நகரக் கமிட்டித் தலைவர்—அப்படியானால் இங்கேதானே தங்குவார்."

"ஆமாம்"

"முதல்லேயெல்லாம், நீங்க காங்கிரசைத் திட்டுவீங்களாப்பா!"

"இல்லையே, யாரம்மா அப்படிச் சொன்னு......"

"எங்கூடப் படிக்கிறானே சோமு, அவன் சொல்றான் அப்பா!"

"அந்தக் காலிப்பய மகன் அப்படித்தான் சொல்வான்"

"ஆமாப்பா, இதுமட்டுமில்லே! இன்னும் என்னென்னவோ சொல்றான், அந்தக் கருப்புக்கட்சிக்காரர் மகன்! நீங்க போன வருசந்தான் இதிலே சேர்ந்தீங்களாம்...எல்லாரையும் ஏமாத்த இது ஒரு வழியாம், மில் தொழிலாளிகளுக்குக் கூலி கூடச் சரியாக கொடுப்பதில்லையாம்—நீங்க அட்டையாம்—ஏழைகள் இரத்தத்தை உறிஞ்சிடுவீங்களாம்—பணத்தை மூட்டை மூட்டையாகக் கட்டி வைச்சிருக்கீங்களாம்!" கோமளம் சிறுபெண்—இருந்தாலும் கொஞ்சம் துருதுருத்தவள். வெடுக்கு வெடுக்கென்று பேசுவாள். தன் பள்ளித்தோழன் சோமு சொன்னதையெல்லாம் ஒருமூச்சு சொல்லிமுடித்தாள் தன்தந்தையிடம்! அவருக்குப் பெரிய தலைவேதனையாகப் போய்விட்டது!

"போய் விளையாடம்மா" என்று கூறி வெளியில் அனுப்ப முயற்சி செய்தார். அவள் அடம் பிடித்தாள். அங்கேயே விளையாடுவதாக ஓட்டாரம் செய்தாள்! அதட்டிக்கொண்டே வந்த பர்வதம்மாளின் குரலைக்கேட்டு பயந்து நடுங்கி ஓடவழி பார்த்தாள். பர்வதத்தின் குரலைக் கேட்டால் பிரமநாயகமே மிரண்டு விடுவார் என்றால், 'துளிர்' என்ன செய்யும்?

* X *

வெளியில் சென்று விளையாடிக் கொண்டிருந்த கொஞ்ச நேரத்திற்

கெல்லாம் மீண்டும் மாடிக்கு வந்தாள்.

"சனியன், எங்கே வந்தே திருப்பவும்......போய் விளையாடென்றால் வந்து வந்து தொல்லை பண்றியே!" என்று சீறி விழுந்தார்.

"அப்பா, நானு வரல்லே, காங்கிரசு கமிட்டிக் காரியதரிசி கன்னியப்பனும்......அவர் உங்களைப் பார்க்கணுமாம்!"

"போய்வரச் சொல் மாடிக்கு!"

கோமளம் ஓடினாள். கன்னியப்பன் மாடிப்படியேறினான்.

"வந்தேமாதரம்!"

"நல்லா வந்தீங்க...நல்லா ஏமாத்திறீங்க!"

"என்ன அவ்வளவு சலிப்பு...... எண்ணைக்குமில்லாத கோபம்! என்னிடம் சொல்லுங்க!"

"காங்கிரசிலே சேர்ந்துட்டா மலையைப் புரட்டுவோம் — வானத்தை வளைக்கலாம்-மணலைத் திரிக்கலாம்-சமுத்திரத்தையே அடக்கிடலாம்னு கதை சொன்னீங்க!"

"மன்னிக்கவேண்டும்! காங்கிரசுக்கு எதிரா நின்னு ஒரு முனிசிபாலிடி கவுன்சிலர் பதவிக்குவரத் ததிக்கிணத்தோம் போட்டீங்க!"

"கொஞ்சம் வாயை அடக்கித்தான் பேசும்"

"காங்கிரசிலே சேர்ந்தீங்க, டிஸ்டிரிக் போர்டு மெம்பர்...... இப்போ, பார்லிமெண்ட் மெம்பரும் ஆகிவிட்டீங்க!"

"சும்மா, கிடைத்துடலே, தம்பி, எங்க வீட்டுப் பணம் எழுபதாயிரம் செலவு!"

"இருக்கட்டுமே! இதிலே சேராமல் இந்தப் பணத்தைச் செலவு செய்தாலும் இந்தப்பதவியை அடைய முடியாதே!"

"காசு செய்கிற வேலே, உங்க காங்கிரசாலே கூட முடியாது ஓய்! காசைக் கண்டால் உங்க காங்கிரசும் வாயைப் பிளந்து கிடடுது!

"சேர்ந்து ஒரு வருசத்திலே உங்களை பார்லிமெண்ட் மெம்பராக்கியிருக்கு—மறக்கவேண்டாம்!"

"சரி, அது தொலையட்டும்—இப்போ எங்கே வந்தீங்" என்று பிரமநாயகம், பேச்சை வேறு பக்கம் திருப்பினார்.

"வந்ததை மறந்துவிட்டு வீண் வார்த்தையாடிவிட்டேன். நம்ம காங்கிரசுத் தலைவர் நம்ம ஊருக்கு வருவதாக எழுதியிருக்கிறார். எலக்ஷன் நெருங்கிடுச்சில்லே! இனிமேல் சுற்றுப் பிரயாணமும் கூட்டமும், மாநாடும்......போட்டுத்தானே ஆகணும்!"

"ஆமாம், அதற்கு!"

"இங்கே, ஒரு பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யலாம்னு இருக்கேன் உங்க தலைமையில்"

"ஆமாம், அவர்தான்—உங்க தலைவர்—ஊருக்கு ஊர், பணக்காரன்களை என் உயிர் உள்ளளவும் காங்கிரசிலே சேரவிடமாட்டேன்னு பேசுறாராம். நான் தலைமை வகித்தால் ஊர்மக்கள் சிரிக்காரோ!"

"இன்னும் உங்களுக்கு அனுபவம் போதலையென்னுதான் சொல்லுவேன் — ஊர்மக்களுக்கு அப்படித்தானே பேசணும். நீங்க பேசினாலும் வேறு எப்படிப் பேசுவீங்க? அடுத்த தேர்தலுக்கு இப்பொழுதிருந்தே ஆயத்தம் செய்து வந்தால்தான் ஏதோ நடக்கும். பழைய நிலைமைப் போயிடுத்து. ஓட்டுரிமையும் அதிக அளவு பண்ணியாச்சு! பணங்கொடுத்தும் கட்டாது! ஜனங்களோ முழிச்சிக்கிட்டாங்க. காங்கிரசோ விநாடிக்கு விநாடி இடியும், அடியும்வாங்கி சரிந்துவிழும் பாழ்மண்டபம் போலிருக்கு! அடுத்தபடி தேர்தலுக்கு நிக்கப்போறவங்க நீங்க — ஏழைக் கன்னியப்பன் எண்ணைக்கும் கொடி தூக்குவான் வயிறு வலிக்கக் கூவுவான்! அதனாலதான் சொல்றேன்!"

"சரி, கிடக்குது குப்பை—தள்ளு! அவர் வந்தால், இந்த மில்லிலே தொழிலாளிகள் கூடிகிட்டு தொல்லே கொடுக்கிறாங்கல்லே, அதைக் கொஞ்சம் காரசாரமாகப் பேசணுமின்னு சொல்லிவை! நானே சொல்றது அவ்வளவு நல்லாயில்லே கொஞ்சம் நீதானே சொல்லிவை! பயல்களைக் கொஞ்சம் பயபடுத்திவைத்தாதான் நல்லது! இருக்கவே இருக்குது எல்லாம் கம்யூனிஸ்டுகள் குறும்புன்னு சொல்லேன்"

"இந்தச் சீட்டைக் கொடுத்துக் கேஷியரிடம் ரூ 200 வாங்கிக்கொள்ளுங்க......ஆகவேண்டியதைச் செய்யுங்க! [illegible] நம்ம கார் [illegible] தருகு [illegible] ஏற்பாடு பண்ணிப்பிடுவம்" என்று பிரமநாயகம் அடுக்கிக் கொண்டே போனார். கன்னியப்பன் முப்பத்திரண்டு பற்களும் தெரியக்காட்டினான்!

கன்னியப்பன் சென்றவுடன் பார்வதம்மாள் மீண்டும் வந்தாள்!

"பார்த்தியாடி.......பணம்பேசுற பேச்சை! போகப்போகிறது நம்ம கார், கூட்டத்திற்குச் செலவுக்கு நம்ம பணம், விருந்து சாப்பாடும், திண்டு மெத்தையோடே படுக்கை நம்ம வீட்டிலே, தலைமை வகிக்கிறது நான், பேசப்போகிற தலைவர்சொல்லி வருவது பணக்காரர்களை நுழைய விடமாட்டேன் என்றாசவடால்! உண்மையில் என்மில்லிலே வேலை செய்கிறவன்களைக் கண்டித்துப் பேசப்போகிறார்! ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி கண்ணே.........ன்னு சொலவாங்கில்லே, அப்படித்தான் இந்தக்கதையும்!"

பிரமநாயகம் சிரித்தார். சிரிக்காமல் என்ன செய்வார்? பார்வதம் ஒன்றும் புரியாமல் விழித்தாள்—நாமுந்தான் விழிக்கிறோம். புரியாமலல்ல, புரிவதால், தெளிவாகத் தெரிவதால், ஆச்சர்யம் அகலவிரிக்கிறது நம் விழிகளை!

✲

வருந்துகிறோம்

—⊛—

நடிகத்தோழர் எம். என். கிருஷ்ணனின் தாயார் பத்மாவதி அம்மாள் 20—6—50 செவ்வாயன்று இயற்கையெய்திய செய்தி கேட்டு வருந்துகிறோம்.

★

ஒன்பதாம் ஆண்டு

9-ம் பக்கத் தொடர்ச்சி

சூழ்ந்து வந்த மேகங்கள் மிரண்டோடியிருக்கின்றன; தத்தித்தவழ்ந்தபோதும், தளிர் நடை துவங்கிய போதும், தயங்காது நடக்கமுயன்றபோதும் — நாம் தாண்டவேண்டிய பள்ளத்தாக்குகள் அதிகமாகத்தானிருந்தன. ஆயினும், நாம்சிந்தை கலங்கவில்லை, ஒவ்வொரு 'பிரச்னை'யிலும் வெற்றி முரசமே கொட்டியிருக்கிறோம்!

தம்பிரான்களின் மிரட்டல், நாவலர்களின் எதிர்ப்பு, சனாதனிகளின் சங்கநாதம், ஜரிகைத்தலைப்பாய்களின் சீற்றம், சங்கடம் விளைவிப்போம் என்று உண்மையைக் கூறியமைக்காக 'உள்ளே இருந்தவர்களிடையே' ஏற்பட்டகொதிப்பு, ஆட்சியாளர்எறிந்த அடக்குமுறை அம்பு இவற்றின்விளைவாக ஏற்பட்ட இதயவேதனை — இத்தனை மேடுபள்ளங்களைத் தாண்டி, இன்று, புது மகிழ்வுடன் துவங்குகிறோம் ஒன்பதாம் ஆண்டை!

இந்த எட்டு ஆண்டுகளில் நம்மை எதிர்நோக்கிய பிரச்னைகள் ஏராளம் —எனினும் எதுவும் நம்மைச் சித்தம் சோரச்செய்து விடவில்லை! சிந்தாகூலத்தில் ஆழ்த்திவிடவில்லை!

எடுத்த காரியம் எதிலும்வெற்றி விரைந்திருக்கிறதேயொழிய நமது பணி வீணாகிவிடவில்லை.

வர்ணஜாலப்பாடு, அலங்காரங்கள், வியக்கும் ஓவியங்கள், கேலிச்சித்திரங்கள்—நமது இதழை அலங்கரித்தவையல்ல, காரணம், கூடாது என்பது அல்ல; இயலவில்லை!

சமதர்மம் தழைக்க வேண்டும்.

ஜாதீயவெறிஒழியவேண்டும். மூடநம்பிக்கை முறியடிக்கப் படவேண்டும்.

முதலாளித்துவம் அழிய வேண்டும்.

தனி நாடு பெற வேண்டும்.

இந்த இலட்சியத் தாகத்தைத் தணிக்கப் பணிபுரிவதே நமது எட்டின் இலட்சியம்.

எனவே, 'மனோகரா வாராய்' என்ற இங்கித மொழியோ, மந்தமாருதத்தென்றல் என்ற நினைப்போ, சுகவாழ்வு தரும் சோலையென்ற சந்தோஷமோ நாம் அடைய விரும்பும் இலட்சியபுரிப்பாதையை அடைத்துக் கிடப்போரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. எதிர்பார்ப்பவர்களுமல்ல நாம்.

சமுதாயத்தை ஆட்டிப்படைக்கும் 'பணப்பிணங்களாக' இருப்போர் நமது வைரிகள். வைதிகபுரியினரும், உயர்ந்த ஜாதியினரும், மூடநம்பிக்கையை முதலாக வைத்து வாழ்க்கை நடத்துவோரும், நம்மைத் தம் பிடியிலிருந்து விடுவிக்கக் கூடாது என்ற வியாபார நுட்பம் தெரிந்த வடநாட்டாருமே 'பணம் பெருத்தான்களாக' இருக்கின்றனர்!

நமது ஆசை, குறிக்கோள் வெற்றி—கொள்கையிழந்தாவது பணம் சம்பாதிப்போம் என்பதல்ல!

ஆகவேதான் 'அழகு' செய்ய முடியவில்லை; அதற்குப்பதில் இரவையும் பகலையும் ஒன்றாகவே பாவித்து சவுண்டிகளுக்குச் சவுக்கடியும், ஆளவந்தார் போக்குக்குக் கண்டனமும், நமது இலட்சியபுரிப் பயணத்துக்கான ஆதாரங்களும், அறிவுமணம் பரவுவதற்கான ஆயத்தங்களும் செய்யும் திருப்பணியில் ஈடுபட்டு வருகிறோம்! எண்ணங்களை மக்களுக்குப் படைப்பதையே மகத்தான பணியென்று கருதுகிறோம்!

ஆகவேதான், நம்மை எதிர்நோக்கும் இன்னல்கள் சிறுதுரும்புகளாகிவிடுகின்றன—அவைகளைப் பொடிப்பொடியாக்கி நமது பணிக்கு ஆதரவு தரும்வாலிபப்பட்டாளமும் வளர்ந்து கொண்டிருக்கிறது.

பணபலம் இல்லாத நிலைமையில், பத்திரிகை நடத்துவதற்கான வசதி வாய்ந்த இயந்திரங்களைப் பெறமுடியாத நிலையில்—பாரவதுகேட்டால் பெருமூச்சைப் பதிலாகத் தந்துவிட்டு, நமது பணியைத் தொடர்ந்து செய்து வருகிறோம்.

ஏழைகளின் இதயங்கள் நமக்கு மாளிகைகள்! நமது கருத்துக்கு ஆதரவு வளர்ந்தால் அதுவே இன்பம்! படைவரிசை பலமாவதைக்கண்டால் பரமானந்தம்!—இதுவே நமது பணிக்கு நாம் பெறும் பரிசுகள் என்று கருதுவதால் திடீரென மின்னும் சிக்கல்களும், சிந்தையைக் கலக்கும் பிரச்னைகளும் நமது இதயத்தில் ஒட்டுவதில்லை — உடனே மறைந்துவிடுகின்றன!

எட்டு ஆண்டுகளில் ஏராளமான பிரச்னைகள் தோன்றின— எனினும் இதயங்கலங்காது அவைகளை முறியடிக்கக் காரணமாயிருந்தவை நமது தோழர்கள் நமது எட்டிடம்காட்டும் அக்கரையும் அன்புந்தான். நமது எட்டைத் தங்களது இலட்சியபுரிப் பயணத்துக்கான பாட்டையென்று இருக்கின்றனர் — அதுவே நமது நோக்கமுங்கூட.

ஆகவே, எப்போதையும்போல, நமது இயக்க வளர்ச்சிக்கான வகையில், இலட்சிய ஈடேற்றத்துக்கான முறையில் பணிபுரிவோம் என்று உறுதி கூறிக்கொள்கிறோம்.

புன்சிரிப்போடு எதைத் தந்தாலும், எப்போது தந்தாலும் 'இதோ, முடித்துவிட்டோம்' என்று உற்சாகத்துடன் பணிபுரியும் அச்சுக் கோர்க்கும் தோழர்களுக்கும், இயந்திரத்தை ஓட்டி இதழைப் பதிப்பிக்கும் இயந்திரமியக்கும் தோழர்களுக்கும், நாட்டின் திக்குத்திசையெங்கும் நமது இதழ் பரவப்பாடுபடும் நிர்வாகக் குழுவினர்களுக்கும், இந்த மகிழ்ச்சிநாளில் நமது நன்றியைச் சமர்ப்பித்துக்கொள்கிறோம்.

நல்ல கருத்துக்களை நாட்டினருக்குப் படைக்கவேண்டும் என்ற ஆர்வம்தூண்ட அப்போதைக்கப்போது கட்டுரைகள், கவிதைகள், வழங்கிய நண்பர்கட்கும், குறிப்பாக, நெடுஞ்செழியன், ப. வாணன், செழியன், கே. எ. மதியழகன், மு. கருணாநிதி, தில்லை வில்லாளன், ஆகியோருக்கும் நமது அன்புகலந்தநன்றிகள்.

இதழ் வளர்ச்சிக்கான வகையில் கேட்டபோது ஆர்வத்துடன் சித்திரங்கள் தீட்டியுதவிய சென்னை பாலுபிரதர்ஸ், விளம்பரங்கள் தந்துதவும் நண்பர்கள், பிளாக் செய்து தரும் அப்பாசாமி கம்பெனியார் ஆகியோர் நம்மால் காட்டும் அன்பு, மறக்கவியலாததாகும்.

புயல் வீசினும் அதைத் தென்றலாக்கிக் கொண்டுவந்திருக்கிறோம்—நமது போக்கால். 'இடியென வந்த பிரச்னைகளைப் பொடிப் பொடியாக்கி வந்திருக்கிறோம். பிரச்னைகள் கோர உருவில் தோன்றும். கொஞ்ச நாட்களில் 'பேசாமடந்தை' போல் மறைந்து விடும். அரசியல், சமுதாயம், வாழ்க்கைத்துறை ஆகியவைகளில் அரும்பிய அந்த வேதனைகளைப் புன்சிரிப்பால் வெற்றிபெற்ற

நமக்கு அன்று தொட்டு ஒரே ஒரு பிரச்னைமட்டும் இன்னும் 'தொடர் கதை'யாகவே இருக்கிறது—முடியவில்லை!

கணக்குப் புத்தகம் காட்டும்கவலை தான் அது!

நமது இதழை, மக்களிடை பரப்பும் மகத்தான சேவையின் தூதுவர்களாக இருக்கும் ஏஜண்டுத் தோழர்கள்—ஆங்காங்கு ஏராளமான இடையூறுகளை எதிர்நோக்கியிருப்பவர் தாம்! எனினும் சில நண்பர்கள் 'மாதம் எப்போது முடியும்?' என்று எதிர்பார்த்து நிற்பதுபோல, முதல் தேதி முகிழ்த்த சில நாட்களுக்கெல்லாம் தொகையை அனுப்பத் தவறுவதில்லை,

ஆனால், பலர் 'வரட்டும்! வரட்டும்!!' என்றே, நடந்துகொள்கின்றனர். அலட்சியத்தால் என்று கூற முடியாது—ஆங்காங்குள்ள வாசகத் தோழர்களின் 'வரவால்' சரிக்கட்ட வேண்டியவர்கள்தான் — எனினும், 'என்ன அவசரம்? இரண்டு நாள் போகட்டுமே' என்றெண்ணி மாதங்களை விரலில் வைத்து விடுகிறார்கள்!

ஆளுக்கொரு கவளம் தந்தால் தானே ஆள் பிழைக்கமுடியும்— நாம், பணத்தின்மீது உருளும் பொம்மைகளுமல்லவே! அலுவலகத்தினர் வியர்வை துடைக்கவும் அன்றன்றாட பட்டியலைக் கவனிக்கவும் 'ஏஜண்டுகளின்' மணியார்டர்களும், செக்குகளும்தானே வந்து உதவ வேண்டும்! நீரில்லாத வயல், வளம் பெற முடியாதே! நாம் வளர, வாழ வழி செய்வது அவர்கள் 'வரவு' தானே!

இதை மீண்டும் இந்த இன்ப நாளில் நினைவூட்டுவதோடு இந்தப் பிரச்னையைத் தீர்க்கும் பொறுப்பை நமது நண்பர்களான ஏஜண்டுத் தோழர்களுக்குச் சுமத்துகிறோம். தீர்க்கமுடியாத பிரச்னையல்ல இது! நண்பர்கள் சிறிதளவு நாட்டம் செலுத்தினாலேபோதும்- 'கொஞ்சத் தொகைதானே, பிறகு அனுப்பினால் என்ன?' என்று நினைப்பவர் உண்டு. அது, அவர்களுக்குச் சிறியதொகை — நமக்கோ அதுபோன்ற 'சிறிய தொகை'கள் துவண்டால், துயரமும் வேதனையும்தான் விரியும்!

ஆகவே,இந்தஆண்டாவது இந்தப் பிரச்னை ஒழியட்டும்—சிறிது நிம்மதி தேடித்தாருங்கள்—நீண்ட பிரச்னைகளை நினைக்க நேரம் தாருங்கள் — பணிபுரிய காத்துக் கிடக்கிறோம், பயன்படுத்திக்கொள்வது உங்கள் கடமை என்பதை ஏஜண்டுகள், சந்தாதாரர்கள், வாசகர்கள், நாட்டுமக்கள் ஆகியோருக்கு அன்புரிமையோடு அறிவித்துக்கொள்கிறோம்.

"வசதி தாருங்கள் — புதுப்புதுப் புனலில் குளிக்கச் செய்கிறோம்!" என்ற உறுதியை உவகைக்கொப்பளிக்கும் இந்த நேரத்தில் நாட்டவருக்குத் தெரிவித்துக் கொண்டு இலட்சியபுரிப் பயணத்தில் ஈடுபடுகிறோம், "காற்றடிக்குது, கடல் குமுறுது, கப்பலும் பிரயாணத்தைத் தொடர்ந்து துவங்குகிறது" என்ற ஆரம்ப கீதத்தோடு!

✲

(4—ம் பக்கத் தொடர்ச்சி)

டோம், இனி ஏமாறமாட்டோம் என்று சொல்லிச் சிரித்தது, சோழ வந்தான்.

முத்தமிழ்க் காவலர்கள், எங்கள் முகாமில் வா அட்டியில்லை, எங்கள் திட்டங்களைத் தட்டி நடக்கமாட்டார்கள் என்று காட்டிற்றுகோவை. அம்பேத்காருக்கு ஆதரவு தரக்கூடிய பெண்கள் மாநாடு, 'கோதையர் நாங்கள், வஞ்சனையால் வாதைப்படும் வாழ்விழந்தோருக்குத் தொண்டு செய்ய, சூதற்ற உங்கள் கொள்கைகளைத் தாங்கி வருகிறோம்' என்று பெண்டிரும் வந்த பெருங்கதையைப் படித்தது.

நண்பர் சுந்தரத்தின் சலியா உழைப்பால், கொள்கை வேகம் குறையாதகோவிந்தன் கூட்டுறவால், பொறுப்புணர்ச்சியோடு காரியமாற்றும் போளூர் சுப்பிரமணியம்தந்த கண்காணிப்பால்,வயல்வரப்பு என்று பாராது, பட்டி, தொட்டி, பெருநகர் என்று பேதங் காட்டாது, புயலெனப் பேசி, தென்றலென இயக்கத்தவரின் இதயத்தில் இடம் பிடித்த சிற்றரசுவின் ஒத்துழைப்பால், இன்று இயக்கத்தில் உருவாகி வரும் உணர்ச்சிக்கு வடிவம் தந்துநின்றது ஆரணி.

நாம் வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம், யார் யார் தங்கள் ஒத்துழைப்பைத் தந்து-கேட்ட நேரத்தில், தேவைப்பட்ட அளவில், உருவில்—உதவிய அவர்கள் எத்தனைப் பேரையும்! ஆரணியை, திராவிட முன்னேற்றக் கழகப் போரணியாக்கிக் காட்டிய எல்லோரையும்!

4-ம் பக்கத் தொடர்ச்சி

கட்டி', வலிந்து'புனைந்துரைக்கிறோம் என்று சொல்லி தப்ப முடியாத வகையில், மந்திரிமார்களின் 'வாய் தவறி' வந்துவிடும் உண்மை 'ஒப்பாரிகளை' அப்படியே ஒலி பரப்பியிருக்கிறோம். கேளாக் காதராக நடிக்கின்றனர்! அவர்களின் செவியின் குற்றம் என்று விட்டுவிடவில்லை—அவர்களின் சிந்தனைப் பஞ்சத்தின் விளைவு என்று புரிந்துகொண்டு, வரப்போகிறது ஒருநாள், அன்று கூவப்போகிறார்கள் இவர்களே, ஐயோ கொடுமை, கடுமை இந்த வடநாட்டு ஆட்சியின் ஓரவஞ்சனை,ஒருசார்புத் தீர்ப்பு, கைவிரிப்பு, கண்டிப்பான மறுப்பு, கண்மூடித்தனமான போக்கு, என்று கவலையின்றி ஆனால் விழிப்போடு காத்திருந்தோம்—காத்திருக்கிறோம்.

எங்கள் எண்ணத்திற்கு, வலுவு தேடும் வகையிலே, நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன!

இராம இராம சீதாராம், பணம் மட்டும் தரமாட்டோம் நாம் என்று மத்திய சர்க்கார் பாடவும், ரகுபதி இராகவ இராசா ராம், நம்பி நம்பி ஏமாந்து நாங்கள் சாகிறோம் என்று மாகாண ஆட்சிக் குழு மாணகீதம் இசைக்கவும், இந்த 'அடியும், அழுகுரலும், என்ற அரசியல் நாடகம் அதிக நாள் ஓடாது என்பதை நாம் சொல்லி வருகிறோம் — அவர்களும் உணர்ந்து வருகிறார்கள்!

✲

முகப்பில்

நமது இதழுக்கு எட்டாண்டுகள் நிறைந்ததை யொட்டி மகிழ்ச்சியின் அறிகுறியாக எடுக்கப்பட்ட புகைப்படம். நண்பர்கள் நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி, வி. புட்டாசாமி, சி. வி. ராசகோபால் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

✲

சுழல் விளக்கு

கோரியாவில் போர்!

அடுத்த உலகப் போர் ஆரம்பமாகிவிட்டது...ஆம், அரசியல் ஆருடக்காரர்கள் அடிக்கடி அரை குறையாகச் சொல்லிவந்த பயங்கர யுத்தம் துவங்கிவிட்டது! இன்னும் முழு உருவில் அல்ல, உள்நாட்டுக் கலகம் என்ற பெயரில்! கொரியாவிலே தன் கோரத் தாண்டவத்தின் முதல் அத்தியாயத்தைப் புரட்டிவிட்டது. சென்ற போரின்போது ஜப்பானிடமிருந்த இந்தச் சிறு தீபகற்ப தேசத்தை அமெரிக்காவும், ரஷ்யாவும் பங்கிட்டுக்கொண்டனர். வட கொரியாவில் பொதுவுடைமை ஆட்சி—தென் கொரியாவில் அமெரிக்க ஆதிக்கம்!

நேரம் பார்த்த அமெரிக்காவின் ஆதிக்க வெறிக்கு, கொரியா, ஒரு பட்டுத் திரை! சந்தர்ப்பமிருந்தால் நழுவவிட மாட்டோம் என்று காட்டத் துடித்த ரஷ்யாவுக்கு இந்தக் கொரியாப் பிரச்சினை ஒரு மறைவுப் படுதா—அவ்வளவு தான்!

ஐ. நா. அவை அவசர அவசரமாகக் கூடிற்று. அகில உலக நாடுகளையும் ஆட்டி வைக்குமோ, இந்தத் திடீர்ப் படையெடுபபு என்ற அச்சத்தால்! சாந்தம், சமாதானத்திற்கென ஏற்பட்ட சபையாயிற்றே, அந்த எண்ணத்தை, அடிப்படையை இன்னும் இழக்கவில்லையென்று காட்டவாவது கூடிப்பிரிய வேண்டுமே! அதன் கிளைகளில் தலைமையான பந்தோபஸ்து கவுன்சில் 'போரை நிறுத்துக, போர்க் கலங்களை வீசியெறிக, போர்க்கள வீரர்கள் வெளியேறுக' என்ற திட்டம் தவிடுபொடி! சியாங்-கே-ஷேக்கின் பிரதிநிதியிருப்பதால் ரஷ்யா அந்த அவையில் பங்கு கொள்வதில்லை. ஆகவே, ரஷ்யா, மதிக்கவில்லை, பாதுகாப்புத் தேடும் உலக அவையின் கட்டளையை! ட்ரூமனோ, ஜப்பானிலிருக்கும் மக் ஆர்தருக்கு உத்தரவு அனுப்பிவிட்டார், 'போரை நடத்து, நம் பெயரை நிலைநாட்டு, கொரியாவிலுள்ளோரைக் காப்பாற்றுவதாகக் காரணங்கூறி!' என்று—மோதிக் கொள்கின்றன, பொதுவுடைமையும், முதலாளித்துவமும்!

அந்தோ.........மீண்டும் போர், கொள்கைச் சண்டை, திரை மறைவில் வல்லரசுகளின் பொல்லாத ஆதிக்க வெறி வேகத்தைத் தணித்துக் கொள்ள யுத்தம்.....கோரப் போர், கொரியாவில்! மூன்றாம் உலக யுத்தத்தின் முன்னுரைதான் இந்தப் போரோ என்று சந்தேகம்—அது துளியும் தேவையில்லையென்று வளர்ந்தோடிவரும் அன்றாடச் செய்திகள் சொல்லுகின்றன!

இரயில் வியாதி!

என்னென்னவோ, கொள்ளை நோய்கள் வருகின்றன! 'ஆயிமகமாய்' புகுந்து விடுகிறாள், ஒரு சமயம்; 'காலரா காலன்' நுழைந்து ஆர்ப்பாட்டம் செய்கிறான், இன்னொரு சமயம்! 'பிளேக் பிரான்,' ஆட்டி வைக்கிறதையும் பார்த்திருக்கிறோம்.

ஆனால், இந்த இரயில் வியாதியைப் போலக் கண்டதில்லை, கேட்டதில்லை திடீர், திடீரெனக் கவிழ்ந்து போவதும், மோதிக்கொள்வதும், அடிக்கடித் தண்டவாளங்களின் மீது போகமாட்டேன் என்று அடம் பிடிப்பதும், இருப்புப்பாதைகளை விலகிக் கிடப்பதும்.....ஒரு சமயம் சிரிப்பு வருகிறது, கேலியால்! கோபம் வருகிறது மீண்டும், நிர்வாகக்கோளாறைப் பார்க்கும்பொழுது! அழுகையும் உண்டு, இடையிடையே, சேதத்தைச் சேர்த்து உருவாக்கி நினைத்தால்!

மந்திரிமார் தரும் மருந்தோ, இருமலுக்கு எத்தன் தரும் செங்கற் பொடிச் சூரணம் போலிருக்கிறது! மந்திரி கோபால்சாமியாரும், அவர் சலிப்படையும்பொழுதஓடிஉதவிடும் சந்தானரும் வியாதிக்கேற்ற மூலிகை தருவதில்லை. விஷயமறிந்தவர்கள் சொல்கிறார்கள்; எல்லா சாமான்களும் 'அறுந்த' பழையதுகளாம்! புது வரவு கிடையாதாம்! 'ரிப்பேர்' என்று தேய்ந்து போனதுகளை, ஒட்டை, ஓடிசல்களைத் தட்டியும், நீட்டியும் மாட்டிவிடுகின்றனராம். பிறகு, கட கடா, கட் கடா......வாரி விடுகின்றனவாம்! சில மானங்கெட்ட மட்டரக வியாதிகளைச் சுமந்து திரியும் மனித விலங்குகள் மருத்துவம் பார்க்கும் இடத்தில்கூட வியாதியின் அடிப்படையை மாற்றியும், திருத்தியும், புகுத்தியும் சொல்கிறார்களல்லவா, அப்படிப் பேசுகின்றனர்! வெட்கத்தைப் பார்த்தால் வியாதியின் கதி? தக்க மருந்து தரமுன்வர வேண்டும், தப்பு காரணங்களைமட்டும் தப்பட்டமடிக்கும், சர்க்கார்.

மூன்று செய்திகள்

சிவகங்கை

நகரப் பொதுநலக் கழகச் சார்பில் உள்ளூர் ஜில்லா போர்டு பெண்கள் ஆஸ்பத்திரியில் பிரசவ விடுதி கட்டட நிதி உதவிக்காகக் காலட்சேபம் நடத்தினர். கலைவாணரின் துணை நாடினர். வசூல் செய்த வண்ணம் உள்ளனர்.

காரைக்கால்

காரைக்காலம்மையார் தேவஸ்தானத் திருக்குளத்தை வெட்டி, படித்துறை சுத்தம் செய்யும் கைங்கர்பத்திற்கு, தருமபுர ஆதீனம் இருபத்து நான்காவது குரு மூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞான சமபந்த பரமாசிரிய ஸ்வாமிகள் ரூ 1000 கொடுத்தார்.

ஸ்ரீரங்கம்

705—11 தோலா தங்கம்—ரூ 83,565 மதிப்பு கொண்டது! இதனைக் கொண்டு பலி பீட ஜீரணோத்தாரணம் செய்யப்பட்டது. இதனைத தயாரிக்கும் செலவுகளுக்காக சென்னை ஹோா அண்டு கோவைச் சேர்ந்த எம்பெருமானார் ரூ 20,000 நன்கொடை அளித்தார்.

இந்த மூன்று செய்திகளையும் கோர்த்து முடித்த கம்பாஸிட்டர் கண்ணுசாமிக்கு ஆத்திரம், ஆத்திரமாக வந்தது! ஏன்? நீங்களே விடை சொல்லுங்கள்!

★ படிப்பகம் ★

மக்கட்பேறு

கவியரசர் பாரதிதாசன் குடும்ப விளக்கு என்ற குண்டு மல்லிச் சரத்திலே, நான்காவது இடமாக வைத்துக் கட்டிக் காட்டுகிறார், இந்த மக்கட்பேறு என்ற குண்டு மல்லிகையை, முகையவிழ்ந்து கவிதையழகு ஒளிவிட, இலக்கிய நறுமணம் கம்மென்று வீசிட, இனிய தமிழ்ச்சுவைத்தேன் நனிக் சொட்டச் சொட்ட!

விலை 10 அணா

✻

முதியோர் காதல்

அதே மலர்ச்சரத்தில் ஐந்தாவது மலர் இது.

விலை 6 அணா

பெறும் இடம்:— பாரதிதாசன் பதிப்பகம், 95, பெருமாள் கோயில்தெரு, புதுச்சேரி.

✻

அத்திப்பூக்கள்

வாழ்க்கைத் தோட்டத்தில் கசங்கி உதிர்ந்துபோன 'கருகிய மொட்டுகளின்' காட்சிச்சித்திரம் இந்நூல். ஐந்து 'இளம்ஜோடி'கள் சுகச்சோலை நாடிப் புறப்படுகின்றன — ஆனால், வேதனைப்புயல் சுழன்று சுழன்று அடிக்கிறது. 'வாழ்க்கை இன்பம்' எழுப்பும் சிக்கல்களைக் கொண்டு மலர்விக்கப்பட்ட 'அத்திப் பூக்களின்' ஆசிரியர் தோழர் தில்லை. வில்லாளன்.

பெறும் இடம்:— எம். சூரி, 14 A. குடையா தெரு, மண்ணடி, சென்னை.

✻

ஒழிச வகுப்புவாதம்

அறிஞர்: கா. அப்பாதுரையார் எழுப்பும் முழக்கம் — உண்மை வகுப்பு வாதத்தின் அரிய படப்பிடிப்பு—இச்சிறுநூல்.

விலை 4 அணா

பெறும் இடம்:— C. R. சேகர், 28, கெனல் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

✻

சபலம்

ஆசிரியர்: நாரண துரைக்கண்ணன் சபலத்தை தட்டிவிட்டு தாய் வீட்டுப் பாசத்தை ஊட்டி, மனிதனும் மாயையும் என்னவெனக் காட்டி, வானம் வெளுத்தது பார் எனச் சுட்டி நிற்கிறார்.

விலை 12 அணா

பெறும் இடம்:— மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

✻

சவுக்கடி தர்பார்

நண்பர்: நாரா — நாச்சியப்பன் குழந்தைச் செல்வங்களுக்கு அளித்திருக்கிற கதைப் புதையல் இது.

விலை 6 அணா

✻

மணி அடித்தது

குழந்தைகள் இலக்கியத்திற்கு நவீனன் அளிக்கும் புது வரவு!

விலை 4 அணா

பெறும் இடம்:— கலைப் பிரசுரம், தேவகோட்டை.

✻

வரப் பெற்றோம்

திருக்குறள் ஏன் தேவை?

ஆசிரியர்:- நிலாவழகன்

விலை 3 அணா

பெறும் இடம்:— அன்னை நிலையம், சூளை, சென்னை.

✻

வாழ்க்கையின் போக்கும், வள்ளுவர் வாக்கும்.

ஆசிரியர்:- சி. இரா. தேசிகன்

விலை 4 அணா

பெறும் இடம்:— மதுரை மாவட்டத் தமிழ்த் தொண்டர் கழகம், கோம்பை.

✻

டாக்டர் அம்பேத்கார்

ஆசிரியர்:- மதிவாணன்

விலை 2 அணா

பெறும் இடம்:— அம்பேத்கார் பதிப்பகம், கஸ்பா, ஆம்பூர் (வ. ஆ.)

✻

இன்பம்

தேசிய எண்ணங்களைச் சுமந்து வரும் ஒரு மாத ஏடு.

விலை 4 அணா

✻

அனல்

கோவையிலிருந்து வரும் ஒரு முற்போக்கு அரசியல் சமூக ஏடு—மாத மிருமுறை வருவது.

விலை ஓரணா

✻

ஆரம்பக் கல்வி

தொடக்கப் பள்ளிக்கானப் பிரச்சினைகளைத் தொடர்ந்து தரும் மாத வெளியீடு.

விலை 4 அணா

✻

விவசாயி

உழுபவன் பக்கம் நின்று உரிமைக் குரல் கிளப்பும் வாரத் தாள்.

விலை 2 அணா

✻

தென்குரல்

நாகர் கோவிலிலிருந்து வரும் குரல் இது.

விலை 2 அணா

✻

திருமணம்

அண்ணாமலைநகரில், 18–6–50-ல், வேதவல்லி—சின்னத்தம்பி, இராசாமணி—இரெங்கசாமி திருமணங்கள், தோழியர் இராமாமிர்தம்மையார் தலைமையில் நடந்தேறியன. இளம்வழுதி, இளஞ்செழியன், இளவழகன், சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

✻

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.